Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-02 | 18-10-2004 | திங்கட்கிழமை | ஓசை -243

க ணே சா ந கை ய க ம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்



இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10478)

# இ.த.அ.சபை வரைவின் அடிப்படையில் மட்டுமே புலிகள் பேச்சு நடத்துவர்!

## நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம் என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

**இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் தான் பேசுவோம் என்பது எமது தேசியத்தலைவர் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த போது தெளிவாக முன்வைத்த நிலைப்பாடு. இதில் புலிகள் உறுதியாகவே உள்ளனர். இந்நிலையில் அரசின் தற்போதைய இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் பேச்சுவார்த்தை என அரசாங்கத்திடமிருந்துவரும் செய்திகள் எமக்கு அதிர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெல்ஜியத்தில் இருந்து லண்டன் பி.பி.ஸி.யின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசின் தற்போதைய இடைக்கால நிர்வாகப் பிரேரணையின் அடிப்படையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடங்கக்கூடுமா? இதை நீங்கள் பரிசீலிப்பீர்களா? எனக்கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

எமது தலைமைப்பீடம் ஏற்கனவே தெளிவான உறுதியான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி 27 ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார்

சிறிலங்காவின் சமாதான முயற்சிகளுக்கான ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைக் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்த இருக்கும் அகாசி, கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த இருக்கிறார் என்றும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சுச் செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கு கிழக்கில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்துலக அமைப்புக்களுடனும் இவர் பேச்சு நடத்த இருக்கிறார். இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வழியில் அகாசி புதுடில்லி சென்று இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சுநடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரவணக்கம்

12.10.2004 அன்று மட்டக்களப்பு கஞ்சிகுடிச்சாறு பகுதியில் அரவம் தீண்டிப் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப்டினன்ட்-புயலரசன் (அழகுதுரை-ரசிக்குமார், பானமைபற்று, கோமாரி, மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## மாற்றுக் கருத்துடைய எக்கட்சியும் உருவாகத் தமிழர் அனுமதிக்கார்

### மட்டு- அம்பாறை கூட்டமைப்பு பா.உ கள் தெரிவிப்பு

(திருகோணமலை)

எமது விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் கூர்மை பெற்றுள்ள இந்த நேரத்தில் வடக்கு கிழக்கில் மாற்றுக் கருத்துடைய எந்தவொரு அரசியல் கட்சியின் உருவாக்கத்தையும் தமிழ் மக்கள் ஏற்கப்போவதில்லை என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். வடக்கு கிழக்கு மற்றும் சர்வதேசத்திலுள்ள தமிழ்மக்கள் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தலைமையின் கீழ் செயற்படுவதற்கு ஒன்றிணைந்திருக்கிறார்கள்.

அதற்கமைவாகவே கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 22 பாராளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் இருந்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இறந்தவர் அறுபத்திநான்கு வயதுடையவர் எனவும், இது கொலையாக இருக்கலாம் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## மின்னல்தாக்கிய மாணவனுக்கு பாதிப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் மாணவன் ஒருவன் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் புதுக்குடியிருப்பு சிவன் கோவிலடிப் பகுதியில் பேருந்திற்காகக் காத்து நின்ற முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த ப. பகீரதன் (வயது-18) என்பவரே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகிச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (08)

## பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத்தவறின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் விரிசல் ஏற்படும்

### -தமிழ்க் கூட்டமைப்புப் பா.உ இரா. சம்பந்தன் எச்சரிக்கை

(திருகோணமலை)

ஆட்சி முறை மாற்றத்தின் மூலம தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். தவறின் யுத்த நிறுத்த உடன்பாடு நீடிக்கமுடியாது. அதில் விரிசல் ஏற்படும், அது முறிவடையலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை திருகோணமலை நகர மண்டபத்தில் நடந்த கூட்டமைப்பின் முதலாவது மாவட்ட அரசியல் விழிப்புணர்வு பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார். இதில் விடுதலைப் புலிகள் திருகோணமலை நகர அரசியல் பொறுப்பாளர் சிவகுமார் தலைமை வகித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாலுசந்திப்பகுதி விபத்தில் இரு மாணவிகள் காயம்

வடமராட்சியின் நெல்லியடி பருத்தித்துறை வீதியில் மாலுசந்திப் பகுதியினில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் சிக்கி மாணவிகள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் அப்பகுதியிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் வசித்துவரும் மாணவிகளே படுகாயமடைந்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு விரைவில் சிறிலங்காவிற்கு விஜயம்

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும், வர்த்தகப் பிரமுகர்கள் குழுவொன்றும் இந்த வருட இறுதியில் சிறிலங்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளன.

சிறிலங்காவில் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரையும் வலியுறுத்தும் முகமாக இந்த விஜயம் அமையவுள்ளதாகக் கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் மரியா மின்னா தெரிவித்துள்ளார். அண்மையில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்முடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து நேற்று முன்தினம் கனடாவின் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் முகமாக நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மரியா மின்னா இவ்வாறு கூறியுள்ளார். சிறிலங்கா செல்லவுள்ள குழுவில், கனடாவின் தேசிய அளவிலான அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், வர்த்தக பிரமுகர்களும் இடம்பெறுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். சிறிலங்காவில் சமாதானத்தை ஏற்படுத்துவதுடன், பொருளாதார வகையில் வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்தமுடியும் என்பது குறித்து தனது இந்த பயணத்தின் போது கலந்துரையாடவுள்ளதாகவும் மரியா மின்னா தெரிவித்துள்ளார். சிறிலங்கா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு புதுநகரில் கிரனைட் வீச்சுக்கு இளைஞர் பலி

மட்டக்களப்பு புதுநகரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கிரனைட் தாக்குதலில் 26 வயது இளைஞரொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் ரஞ்சித் எனப்படும் குமாரசூரியம் மகேஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். ஏற்கனவே விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்து அண்மையில் விலகிய இவர் மத்திய கிழக்கு நாடொன்றிற்கு வேலை வாய்ப்பிற்காகச் செல்லவிருந்தார். நேற்று அதிகாலை வீட்டில் உறக்கத்திலிருந்த சமயம் 1.30 மணியளவில் இவரது அறைக்குள் கூரை வழியாக இனந்தெரியாத நபர்களினால் இந்தக் கிரனைட் வீசப்பட்டுள்ளது. காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சில நிமிடங்களில் மரணமானார். புதுநகரைப் பொறுத்தவரை இது பாதுகாப்பு வலயம் எனக் கருதப்படும் பிரதேசமாகும். தேசிய துணைப்படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### துவிச்சக்கர வண்டி மாறிவிட்டது

வட்டக்கச்சி பகுதியில் லுமாலா இல. 5721253இலக்கம் உடைய துவிச்சக்கரவண்டி ஒன்று 14.10.2004 அன்று இராமநாதபுரம் கிராம அலுவலகத்தில் மாறிவிட்டது இதற்குப் பதிலாக லுமாலா இல.57212734 எனும் துவிச்சக்கரவண்டி முன்னைய துவிச்சக்கரவண்டி உரிமையாளர் பொன்னையா என்பவரிடம் மாறுப்பட்டுள்ளது. எனவே தயவு செய்து மாறி துவிச்சக்கர வண்டியை எடுத்தவர்கள் இராமநாதபுரம் கிராம சேவையாளர் இல்லத்தில் ஒப்படைக்கும் வண்ணம் பொன்னையா அவர்கள் வேண்டியுள்ளார். (5188)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P. 021-2285750 (சி-10551)

### தவறிவிட்டது

இல.12, ஆனந்தன், வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தை முகவரியாகக்கொண்ட தருமராஜா கஜேன் என்பவரது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது 228-5947என்ற T.P.இலக்கத்திற்கோதொடர்பு கொள்ளவும். (5189)

# ஆனந்தசங்கரியின் கடிதத்திற்கு யாழ்.பொது அமைப்புக்கள் கண்டனம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியோ, தமிழ் மக்களின் உணர்வுகளைப் பற்றியோ, தமிழ் மக்கள் தங்களது இதய தெய்வமாகப் போற்றும் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் பற்றியோ புரிந்துகொள்ளாமல் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத கடிதமொன்றினை வெளியிட்டதற்கு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தனது வன்மையான கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக்கொள்கிறது. இவ்வாறு ஆனந்தசங்கரியின் கடிதத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கடந்த பொதுத் தேர்தலில் கட்டுப்பணத்தைக் கூடப் பெற முடியவில்லை. உங்கள் அரசியல் சாணாக்கியம் என்னவென்று மக்களுக்குத் தெரியும். எதற்குமே அருகதையற்ற உங்கள் செயற்பாடுகளை இத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். அரசியல் என்று நீங்கள் செய்யும் மோசடிகளும் வெளிநாடுகளுக்குச் சென்று தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகச் செய்யும் தில்லுமுல்லுகளும் நாமறிவோம். தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்த கனடாவில் பொங்குதமிழ் பொங்கிப் பிரவாகித்தது. அந்தப் பொங்கு தமிழைக் குழப்ப நீங்கள் எடுத்த பகீரதப் பிரயத்தனத்தை எம்மால் மறக்க இயலவில்லை. நீங்கள் அந்த முயற்சியில் தோற்றுப்போனது எமக்கு மிகுந்த மகிழ்ச்சி.

உங்கள் பழைய பொய், பித்தலாட்ட அரசியலிற்கு எடுபடும் நிலையில் தாயகம் தொட்டு சர்வதேசம் வரை வாழும் தமிழர்கள் இல்லை என்பதனைப் புரிந்துகொள்ளுங்கள். இது தமிழீழ தேசியத் தலைவரின் பின்னால் தமிழ் மக்கள் அனைவரும் அணிதிரண்டு நின்று விடுதலைக்குப் போராடும் காலம் என்பதனை ஏன் உணர மறுக்கிறீர்கள்?

தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை, கௌரவம்,பாதுகாப்புத் தொடர்பாகவோ அல்லது தமிழர்களது அரசியல் அபிலாசைகள் தொடர்பாகவோ சங்கரிக்கு அரசியல் முதிர்ச்சி இருந்திருந்தால் யதார்த்தத்திற்குப் புறம்பான கருத்துக்களை வெளியிட்டிருக்கமாட்டார்.

வடக்கு-கிழக்கு இணைந்தது தான் தமிழர் தேசியம். அதுவே எமது தாயகக் கோட்பாடு. அது இரத்தம் சிந்திப் பெற்றது. ஆயிரமாயிரம் மாவீரர்களின் தீரத்தாலும், தியாகத்தாலும் அது விளைந்தது. அதற்கு உரிமை கொண்டாட யாருக்கும் அருகதை கிடையாது.

ஆயிரமாயிரம் மாவீரர்கள் பெற்றுத்தந்த தமிழ்த்தேசியத்தை கூறுபோட எவருக்கும் உரிமை கிடையாது. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை புலிகளிடம் கையளிக்கப்பட வேண்டும் என கடந்த பொதுத் தேர்தலின் மூலம் மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். இதனைச் சர்வதேச சமூகமும், அங்கீகரித்திருக்கின்றது. ஆதலால் பல வழிகளிலும் பலம்கொண்ட புலிகளிடம்தானே இடைக்கால அரசு கொடுக்கப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை. இதைவிடுத்து அரசு மாற்று யோசனை வைத்தாலும் அதனால் எதுவும் ஏற்படப்போவதில்லை. தமிழ்த்தேசியத்திற்கு வலுவூட்டக்கூடிய தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை தாங்கள் எதிர்ப்பதன் மர்மம் என்ன?

கிழக்குமாகாணம் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். ஏனைய இனத்தவர் சம எண்ணிக்கையில் வாழ்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், இராணுவ ஆக்கிரமிப்பும்தான். இதனைச் சங்கரி அவர்களே நியாயப்படுத்துகிறீர்களா?

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையானது தமிழ் மக்களால்தான் முன்வைக்கப்பட்டது என்பதை அறியவில்லையா? சர்வதேச நாடுகளில் வைத்துத் தானே நகல் வரையப்பட்டது. அது உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. அதைவிட்டுப் புதுக்கதை விடாதீர்கள். வயதாகிவிட்டால் வாலைச் சுருட்டிக் கொள்வது தானே. வீண் வம்புக்கு ஏன் போவான். தமிழ் மக்களின் தன்மான விடுதலைப் போராட்டத்திற்கு துணை நிற்காமல விட்டாலும், அதனை அழிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம்.

தியாகமும், தீரமும் நிறைந்த போராளிகளின் தலைவன்; உலகில் பரந்து விரிந்து வாழும் தமிழர்களுக்குத் தலைவன்; தமிழர்களின் விடுதலைக்காக கழுத்திலே நஞ்சை ஏந்திக் காத்திடும் தலைவன்; தன்னலமில்லாத அந்தத் தலைவனுக்குப் புத்திமதி கூறுகிறாயா? சங்கரியே உன் புத்தி எங்கே போனது? உமக்கு என்னதகுதி இருக்கிறது? புத்தி கூறும் அளவுக்கு உமக்கு எங்கே யோக்கியதை இருக்கிறது? விடுதலை என்றால் என்னவென்று தெரியாதா?வெற்று வேலையாகி விளையாட்டாகத் தமிழனது வீரத்தைச் சோதித்துப்பார்க்கிறாயா? வேண்டாம் சங்கரி ஐயாவே! வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

## தியாகி திலீபன் மருத்துவமனைகளில் வெளிநாட்டு நிபுணர்கள் சிகிச்சை

லண்டனிலிருந்து வருகை தந்துள்ள •பொது மருத்துவம், கண்மருத்துவ நிபுணர்களால் கீழ் குறிப்பிடும் திகதிகளில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையங்களில் சிகிச்சை வழங்கப்படவுள்ளது. மேற்படி சிகிச்சை பெற இருப்போர் கீழ் வரும் நாட்களில் சென்று சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இன்று ஐயன்கன்குளத்திலும், செவ்வாய், புதன் கிழமைகளில் பூநகரியிலும், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் புளியங்குளத்திலும், சனிக்கிழமை மாங்குளத்திலும் சிக்சையினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

## முரண்பாடுகளைத் தீர்க்கும் வழிமுறைகள் குறித்து கருத்தரங்கு

மன்னாரில் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் அண்மையில் அடம்பனில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக மாந்தை மேற்கு பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தில் முரண்பாடுகள் என்றால் என்ன? அதனைத் தீர்க்கும் வழிமுறைகள் யாவை? என்பது தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றை நடத்தியது.

இந் நிகழ்விற்கு செல்வி இந்திரா தலைமை வகித்தார். மேலும் வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு முரண்பாடுகளிற்கு எதிர்நீச்சல் போட்டு, எவ்வாறு வெற்றிகொள்வது என்பது தொடர்பான கருத்துக்களைப் பலரும் தெரிவித்தனர். இதில் 40இற்கு மேற்பட்ட கிராம மட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பீற்றர் செய்திருந்தார். (மி)

# இலங்கையில் 3500 பேர்வரை எயிட்சினால் பாதிக்கப்பட்டுள்ளனர்

### வைத்திய கலாநிதி எம்.எ.சி.ரிபைய் தெரிவிப்பு

(அலுவலகசெய்தியளர்)

இலங்கையில் 3500பேர்வரை எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாமெனவும் இருப்பினும் இதுவரை 552 பேர் மட்டுமே எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணிமனையில் கடந்த திங்களன்று நடைபெற்ற எயிட்ஸ் பற்றிய கருத்துரையாடலின் போது எச்.ஐ.வி-எயிட்ஸ் நோய் தடுக்கும் செயற்திட்டத்திற்கான வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கான பிரதிநிதி வைத்திய கலாநிதி எம்.எ.சி.ரி.பைய் தெரிவித்தார்.

எயிட்ஸ் நோய்க்கு எதிரான செயற்பாடுகள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தரம் உயர்ந்த சிகிச்சை முறைகளைப் பயன்படுத்தல், மக்களிடையே விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தல், உளவளத்தை அதிகரிக்கச் செய்வது போன்ற மூன்று வகையில் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுமென்றார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோரன்ஸ் கிரிஸ்ரி தலைமையில் நடைபெற்ற எயிட்ஸ்நோய் பற்றிய கருத்தரங்கில் யு.என்.எச்.சி.ஆர், யு.என்.எ.ஐ.டி.எஸ், யு.என்.ஐ.சி. எ.எப் நிறுவன அதிகாரிகள், மற்றும் சுகாதாரத்திணைக்களம் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

மேற்படி நோய் சம்பந்தமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பங்காற்றுவது என இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பெற்றது. (சோ)

## மாலைநேர வகுப்புக்களை மறுசீரமைக்க அறிவுறுத்து

கடந்த 4 மாதங்களில் ஜீ.ரி.சற் மாலைநேரவகுப்பு மாணவர்களில் எல்லாப்பாடங்களின் சராசரி 40ஆகவும், கணிதம், மொழி ஆகிய பாடங்கள் ஒவ்வொன்றிலும் 35 புள்ளிகளுக்குக் கூடுதலாகவும் பெற்றால் மாலை நேர வகுப்பில் இருந்து நீக்கி புற நிகழ்ச்சிகளிலும், வகுப்பறை வேலைகளிலும் ஈடுபடுத்துமாறு ஜீ.ரி.சற் தொழில் நுட்ப ஆலோசகர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார். அத்துடன் ஜீ.ரி.சற் மாலை நேர வகுப்பில் பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் தொடர்ந்து பிற்பகல் உணவு வழங்குமாறு கூறியுள்ளார். (34)

## முல்லை தபால் அத்தியட்சருக்கு சேவை நலம் பாராட்டு விழா

வேறு மாவட்டத்திற்கு மாற்றலாகிச் செல்லும் முல்லை,வவுனியா மாவட்டத்தில் தபால் அத்தியட்சராய் பணிபுரிந்த வீ. குமரகுரு அவர்களுக்கு கடந்த 10ஆம் திகதி பிரிவுபசார வைபவம் முல்லை மாவட்ட தபால் அதிபர் கி.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையினை முள்ளியவளைத் தபாலதிபர் ஆர்.கெங்காதரன் நிகழ்த்த, பாராட்டுரைகளை ஒட்டுசுட்டான் தபால் அதிபர், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் அ.மரியராசா, முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளர், வவுனியா பிரதம தபால் அதிபர், ஓய்வு பெற்ற உபதபால் அதிபர் இரட்ணராஜா, தபால் தரம்பிரிக்கும் உத்தியோகத்தர் சூ.மனோகரராஜா, உபதபால் அதிபர் நா.அரவிந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.சேவையைப்பாராட்டி நினைவுச் சின்னத்தினை ஓய்வு பெற்ற தபால் விநியோகத்தர் சோ.சண்முகநாதன் தபால் அத்தியட்சகர் வீ.குமரகுருவுக்கு வழங்கினார். சிறப்புரையினை விழா நாயகன் வீ.குமரகுரு நிகழ்த்தினார். நன்றியுரையினை உதவித்தபால் அதிபர் இராஜேந்திரம் நிகழத்தினார்.

இந்த நிகழ்வில் சகல தபாற்பணியாளர்களும், அரச அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (20)

# புதிர்க் கணக்குப் போட்டியில் பரிசில் பெறுவோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் விவசாயத் திணைக்களமும் கால்நடை உற்பத்தி,சுகாதார திணைக்களமும், இணைந்து நடாத்திய பொருண்மிய கண்காட்சியின் போது கண்காட்சியில் சேவையாற்றிய கிராமிய அபிவிருத்தி வங்கியினரின் நடமாடும் சேவையினரால் பார்வையாளர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட புதிர்க் கணக்குப் போட்டியில் சரியான விடையினை எழுதி குலுக்கல் முறைமூலம் தெரிவானோர் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.

புதிர் ஒன்றில் தெரிவுசெய்யப்பட்டோர். செல்வி த.லோஜினி- வட்டக்கச்சி மகாவித்தியாலயம், செல்வன் து.திவாகர்-கிளி நொச்சி மத்தியகல்லூரி,செல்வன் ச.செந்தூரன்- கிளிநொச்சி மத்திய கல்லூரி,

புதிர் இரண்டில் தெரிவு செய்யப்பட்டோர். .செல்வி செ.ஜதீசனா வட்டக்கச்சி மகாவித்தியாலயம்,.செல்வன் சா.அலெக்ஸ் நோபேட் வட்டக்கச்சி மகாவித்தியாலயம்,செல்வன் வ.இலங்கைநாதன், தருமபுரம் மகாவித்தியாலயம்.

ஆகியோரே பரிசிற்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேற்படி பரிசுப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டவர்களை கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையில் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளு மாறுகிராமிய அபிவிருத்தி வங்கியினர் கேட்டுள்ளனர். (சோ)

## 19 வருடங்களாகத் திருத்தப்படாத வீதியின் சீர்கேடு குறித்து மகஜர்

(மன்னார்)

வங்காலை,நானாட்டான் முருங்கன் வீதி கடந்த 19 வருடங்களாக மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அரச ஊழியர் முதல் பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள்வரை பலர் பயணம் செய்யும் வீதி யுத்த அனர்தங்களால் பாதிக்கப்பட்ட போதும் இது வரை பாதை திருத்தப்படவில்லை. இதனால் இப்பகுதி வாழ் மக்கள் பெரும் விசனமடைந்து, வீதி அதிகார சபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர். (மி)

# டார்பனில் 70000 பேர் பட்டினியால் இறப்பு உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை

## -சூடானிய அரசாங்கம் மறுப்பு

**சூடானின் டார்பன் பிரதேசத்தில் 70 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பட்டினியினாலும், நோயினாலும் இறந்திருக்கின்றார்கள் என்ற வகையில் உலகசுகாதார ஸ்தாபனம் தெரிவித்த தகவல் பிழையானதென சூடானின் வெளிவிவகார அமைச்சர் முஸ்தப்பா தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பாக டார்பரில் உள்ள உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகளிடமிருந்து அவர் விபரங்களைக் கோரியுள்ளார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஐக்கியநாடுகள் அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

மாதாந்தம் அப்பிரதேசத்தில் போசாக்கு இன்மையாலும், நோயினாலும், பட்டினியாலும் 10 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இறக்கின்றார்களெனவும், இதே வேளை வன்முறைகளினால் கொலலப்படுபவர்களின் எண்ணிக்கை இதில் அடங்கவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

டார்பர் பிரதேசத்தில் இடம் பெறுகின்ற வன்செயல்கள் கட்டுப்படாவிட்டால் சூடான் மீது பொருளாதாரத்தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிவருமென ஐ.நாடுகள் பாதுகாப்புச்சபை எச்சரித்துள்ளது தெரிந்ததே.



தென்கொரிய விமானப்படை உறுப்பினர் ஒருவர் ஈராக்கிற்குச் செல்லமுன் தனது பிள்ளைகளிடம் விடைபெறுகின்றார்.

# 17 நாட்கள் சண்டைக்குப் பின் காசாவிலிருந்து படைகள் விலகல்

(டெல்அவில்)

வடக்கு காசாவின் நிலப்பகுதிகளில் பலஸ்தீன ரொக்கட் தாக்குதல்களைத் தடுப்பதற்கான 17 நாட்கள் சண்டைக்குப் பின்னர் இஸ்ரேல் தனது படைகளை அங்கிருந்து அகற்றியுள்ளது. ஜவாரிய அகதிகள் முகாமிலிருந்து இஸ்ரேல் நேற்று முன்தினம் இரவோடு இரவாகப் படைகளை விலக்கிக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. 17 நாட்கள் தாக்குதல்களில் இறந்தவர்களில் 30இற்கும் அதிகமானவர்கள் குழந்தைகள் என்று மனித உரிமை குழுக்கள் கூறியுள்ளன.



சனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக நேற்றுப் பெலாரஸில் நடைபெற்ற மக்கள் கருத்துக்கணிப்பின் போது "மின்ஸ்க்" என்ற இடத்தில் தமது வாக்கைச் செலுத்தும் பெலாரஸியர்கள்.

# யுரேனியம் செறிவூட்டும் திட்டத்தை நிறுத்தும் யோசனையை ஈரான் நிராகரிக்கும்

## -ஈரான் அரசு அறிவிப்பு

(தெகிரான்)

யுரேனியம் செறிவூட்டும் திட்டத்தை நிறுத்துவதற்கான எந்த யோசனையும் நிராகரிக்கப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது.

ஈரான் அணுவாயுதங்களை நாடுகின்றதா? எனும் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் தெரிவித்துள்ள யோசனையை ஈரான நிராகரித்துள்ளது.

இதனை ஈரானின் உயர் தேசிய பாதுகாப்பு அமைச்சரவையின் வெளியுறவுக் கொள்கைத் தலைவரான ஹுசைன் முஷாசை தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவிகளைப் பெற்று கொண்டு ஈரான் 'அதற்குப் பதிலாக யுரேனியம் செறிவூட்டும் திட்டத்தைக் கைவிடச் செய்வதற்கு அமெரிக்கா, ரஷ்யாவின் ஆதரவை நாடுவதாக ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் கூறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




கெய்ட்டியில் ஐ.நா.அமைதி பேணும் டாங்கி சனாதிபதி மாளிகையின் முன் நிறுத்தப்பட்டுள்ளது.

### ஆந்திர அரசு- நச்சலைட்டுகள் பேச்சில் முன்னேற்றமில்லை

# போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட அரசு மறுப்பு ஆயுதங்களைக் கீழே போட தீவிரவாதிகள் மறுப்பு

(கைதராபாத்)

ஆந்திர அரசுப் பிரதிநிதிகளுக்கும அம்மாநிலத்தில் ஆயுதப்போராட்டம் நடத்திவரும் நச்சலைட் தீவிரவாதிகளுக்கு மிடையே கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான நேரடிப்பேச்சுவார்த்தையில் இதுவரை முன்னேற்றமெதுவும் ஏற்படவில்லை. போர்நிறுத்தம் கடந்த யூன் முதல் இருபகுதியினராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றபோதும், போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் அதிகார பூர்வமாக கையொப்பமிட ஆந்திர அரசு மறுத்து வருகிறது. அதேவேளை ஆயுதங்களைக் கீழே போட தீவிரவாதிகள் மறுத்து வருகின்றனர்.

கைதராபாத் நச்சலைட்டுக்கள்- ஆந்திர அரசு பேச்சுவார்த்தையில் திடீர் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆந்திர வரலாற்றில் முதன் முறையாக அம் மாநில அரசும், மக்கள் போர்க்குழு என அழைக்கப்படும் நச்சல் தீவிரவாத அமைப்பினரும் கடந்த வெள்ளிக்கிழமை கைதராபாத்தில் நேரடிப்பேச்சு வார்த்தையைத் தொடங்கினர். இந்தப்பேச்சு வார்த்தையில் ஆந்திர அரசு சார்பில் மாநில உள்துறை அமைச்சர் ஜனாரெட்டி தலைமையிலான 9பேர் கொண்ட குழுவும் மக்கள் போர்க்குழு அமைப்பு சார்பில் 20 பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர். நேற்று முன்தினம் 2ஆவது நாளாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது மக்கள் போர்க்குழு சார்பில் அரசிடம் 11 அம்சக்கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. முதற்கட்டமாக போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அரசு அதிகார பூர்வமாகக் கையெழுத்திட வேண்டும என்று நக்சலைட்டுத் தலைவர்கள் வற்புறுத்தினர்: ஆனால் நக்சலைட்டுக்களின் கோரிக்கைகளில் 7ஆவது பிரிவில் எக்காரணம் கொண்டும் ஆயுதங்களைக் கீழே போடமாட்டோம். என்று கூறியுள்ளனர். இதற்கு சுதந்திர அரசு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. கடந்த யூன் மாதம் முதற்கொண்டே ஆந்திர அரசும், மக்கள் போர்க் குழுவினரும் போர்நிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால இரு தரப்பினரும் இதுவரை அதிகார பூர்வமாக எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை.

எனவே பேச்சுவார்த்தையின் தொடக்கமாக ஆந்திர அரசு அதிகார பூர்வமாகப் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமென்று நக்சலைட்டுத் தலைவர்கள் கூறினர். இதை அமைச்சர் ஜனா ரெட்டி ஏற்கவில்லை.

இதுகுறித்து பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில்

ஏற்கனவே கடந்த யூன்மாதம் முதல் போர்நிறுத்தம் அமுலில் உள்ளது. இந்நிலையில் அதிகார பூர்வமாக ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திட அரசு விரும்பவில்லை. மேலும் நக்சலைட்டுக்கள் ஆயுங்களை முழுமையாகக் கீழே போடும வரை அதிகார பூர்வ ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பில்லை. குறிப்பாக அரசியல் பிரச்சாரத்தின் போது மக்கள் போர்க்குழுவினர் ஒரு போதும் ஆயுதங்களை ஏந்தக் கூடாது. இதில் அரசு மிகமிக உறுதியாக இருக்கிறது என்று தெரிவித்தார். இதனால் நேற்று முன்தினம் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாக வில்லை. எனவே பேச்சுவார்தையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனினும் இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்காமல் மாநிலத்தில் அமைதியை நிலை நாட்டுவது என்று ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது.

## ஹெலியின் உதவியுடன் திருடன் கைது

(ஒஸ்லோ)

பிரபலமான மோட்டார் வாகனத் திருடன் ஒருவனை நோர்வேப் பொலிஸ் குழு நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளது. 20 வயது நிரமபிய இந்த இளைஞன் மோட்டார்க் கார் ஒன்றுடன் தப்பிச்சென்று கொண்டிருந்தவேளை பொலிசார் இவனைப் பின் தொடர்ந்தனர். இருப்பினும் இவரின் வாகனம் அதிவேகமாகச் சென்றதன் காரணமாகப் பொலிசார் அவனைத் துரத்துவதைக் கைவிட்டு ஹெலி கொப்டர் ஒன்றின் மூலம் இளைஞன் கண்காணிக்கப்பட்டு பொலிஸ் நாய்களின் உதவியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளான்.

# இந்திய ஒற்றுமையைக் காக்க தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்

## –வை. கோ தெரிவிப்பு

இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பவற்றைக் காக்க தமிழ், ஆட்சி மொழியாக வேண்டும் என வை.கோ கூறியுள்ளார். கடந்த ஆண்டு இதேநாளில் பழநெடுமாறன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தமிழகத்தின் தலைநகரில் நடக்கும் தமிழ்ச்சங்க விழாவில் நெடுமாறன் பேசக்கூடாது என்ற நிலை உள்ளது. இப்படிப்பட்ட தடைகள் எல்லாம் உடைத் தெறியப்பட வேண்டும். எந்த ஆட்சியிலும் இப்படிப்பட்ட தடை வந்தது கிடையாது. தமிழ் செம்மொழி ஆக்கப்பட்டதன் மூலம் உலக அளவில் தமிழ்மொழி வளர்ச்சி பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் ஆட்சி மொழி என்ற தகுதியையும் தமிழ் பெறவேண்டும் என அவர் மேலும கூறியுள்ளார்.

# மும்பாயை ஷங்காயைப் போன்று ஆக்க திட்டம் வகுக்குமாறு இந்.பிரதமர் பணிப்பு

(புதுடில்லி)

சீனாவின் வர்த்தகத் தலைநகர் ஷங்காயைப் போன்று மும்பை நகரையும் ஆக்குவதற்கான திட்டத்தை வழங்குமாறு மத்திய நகர்ப்புற அமைச்சகத்தையும், திட்டக்குழுவையும் பிரதமர் மன்மோகன்சிங் கேட்டுக் கொண்டுள்ளார். இதுதொடர்பாக புதுடில்லியில் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியுள்ள பிரதமர், நாட்டின் ஒட்டுமொத்த மதிப்பையும் பிரதிபலிக்கும் வகையில் மும்பை நகரை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# ஜார்க்கண்ட் மாநிலத்தில் தீவிரவாதிகளின் தொடர் தாக்குதலில் கட்டடங்கள் பல அழிப்பு

(புதுடில்லி)

ஜார்க்கண்ட் மாநிலத்தில் காட்டிலாகா அலுவலகத்தை தீவிரவாதிகள் வெடிகுண்டு வைத்துத் தகர்த்தனர்.

லதேகர் மாவட்டம் மெடனி நகரில காட்டிலாகா அலுவலகம் உள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை சுமார் 50 தீவிரவாதிகள் அங்கு திரண்டு வந்தனர். அலுவலகத்தில் டைனமற் வெடிகுண்டை வைத்து வெடிக்கச் செய்தனர். இதில் அந்த அலுவலகம் இடிந்து நொருங்கியது. சம்பவம் நடந்தபோது அந்த அலுவலகத்தில் யாரும் இல்லை. அதனால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

தீவிரவாதிகள் பொலிசாரின் நடவடிக்கையை கண்டித்துத் தாக்குதல் வாரத்தைக் கடைப்பிடித்து வருவதாக ஏற்கனவே அறிவித்திருந்தனர். இதையொட்டி கடந்த சில நாட்களாக தொடர்ந்து வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தி வருகிறார்கள். கடந்த 11 ஆம் திகதி முகுதந்த் என்ற இடத்தில் இரண்டு கட்டடங்களை வெடிகுண்டு வைத்துத் தகர்த்தனர். வியாழக்கிழமை வெஸ்லிகஞ்ச் காட்டிலாகா அலுவலகத்தையும், வெள்ளிக்கிழமை குந்தாரி என்ற இடத்தில் உள்ள அலுவலகத்தையும் அதன் தொடர்சசியாக மெடனி நகர் காட்டிலாக அலுவலகத்தையும் குண்டு வைத்துத தகர்த்துள்ளனர்.

# நெருப்புக்காய்ச்சலின் தாக்கம் அதிகரிப்பு; சுகாதார நடைமுறைகளைக் கைக்கொள்ளவும்!

## தமிழீழ சுகாதாரசேவை வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

**தற்போது எமது பகுதிகளில் அதிகமாகக் காணப்படும் தொற்று நோயாக நெருப்புக்காய்ச்சல் காணப்படுகின்றது. எனவே இந்நோய்த்தாக்கத்திலிருந்து மீள கீழ்க்காணும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.**

1. குடிப்பதற்கு கொதித்த நீரை மாத்திரம் பயன்படுத்துங்கள் அதே போன்றே உணவுத் தேவைகளுக்கும் பாதுகாப்பான நீரையே பயன்படுத்துங்கள்.

2. உணவு சமைக்க முன், உணவு உண்ண முன், உணவுவூட்ட முன், உணவு பரிமாற முன், மலம் கழித்த பின் கைகளுக்கு சவர்க்காரம் போட்டுக்கழுவுங்கள்.

3.மலங்கழிப்பதற்கு மலசல கூடத்தை மட்டும் பயன்படுத்துங்கள். மலசலகூடம் இல்லாதவிடத்து வெட்டிப் புதையுங்கள்.

4. சமைத்த உணவுகளை ஈ மொய்க்காத வண்ணம் மூடிப் பாதுகாத்து வையுங்கள்.

5.எவ்வேளையும் பாதுகாப்பான உணவுகளை உண்ணுங்கள்.

6. குழந்தைகளின் மலத்தையும் மலசலகூடத்தில் அகற்றுங்கள்.

7. வீதியோரங்களில் திறந்த நிலையில் விற்பனை செய்யப்படும் உணவுப்பண்டங்களை உண்ணாதீர்கள்.

8.வீதியோரங்களில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் குளிர்பானங்கள், மென்பானங்கள் போன்றவற்றைப் பருகுவதைத் தவிருங்கள்.

(சோ)

# தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு!

(கிளிநொச்சி)

இராமநாதபுரம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

காளி கோயிலடி புதுக்காடு இராமநாதபுரத்தைச் சேர்ந்த செல்லத்துரை என அழைக்கப்படும் கோவிந்தன் (வயது -55) என்பவரின் சடலம் இராமநாதபுரம் குளத்தின் காட்டுப்பகுதியில் உள்ள நாவல் மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டக்கச்சிப் பிரதேச காவல் பணிமனையினர் மேற்கொண்டு வருவதாக வட்டக்கச்சி காவல பணிமனை துணைப் பொறுப்பாளர் சுமதி தெரிவித்துள்ளார். (15)

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வீதிகள்,நீர்க் குழாய்கள் புனரமைப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வீதிகளும் வயல்களுக்குச் செல்லும் நீர்க்குழாய்களும் புனரமைப்பு வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த 1ஆம் திகதி தொடக்கம் வேல்ட்விசன் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் என்பன இணைந்து இப் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றன. மற்றும் உலர் உணவுடனான திட்டத்தின் கீழ் வீதிகள், கால்வாய்கள் என்பன சிரமதானப் பணி மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந் நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தலில் 10 வீட்டுத் திட்டத்தில் இருந்து ஆறுமுகம் வீதி வரையான வீதியும், 10 வீட்டுத்திட்டத்தில் இருந்து சில்வாவீதி வரையான வீதியும் தற்போது புனரமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (12)

# பிரிவுபசார வைபவத்தில் வைத்திய அதிகாரி கௌரவிப்பு



(அலுவலக செய்தியாளர்)

முழங்காவில் வைத்தியசாலையில் பொறுப்பு வைத்திய அதிகாரியாக இருந்த டாக்டர் தர்மேந்திரா முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரியாக இடமாற்றம் பெற்றுச் சென்றதையிட்டு அண்மையில் அவருக்கான பிரிவுபசாரம் முழங்காவில் வைத்தியசாலையில் இடம் பெற்றது.

டாக்டர் ச.முருகானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். டாக்டரின் சேவை பற்றியும், முழங்காவில் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தமை பற்றியும் பலரும் குறிப்பிட்டனர்.

தளபதி லக்ஸ்மன் டாக்டர் தர்மேந்திராவுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி உட்படப் பலரும் பாராட்டுரைகளை வழங்கினர். டாக்டர் சிவபாத சுந்தரம் டாக்டர் தர்மேந்திராவுக்கான நினைவுப் பரிசினை வழங்கினார். (சோ)

# மிதிவண்டியில் பயணித்தவர் திடீரென வீழ்ந்து மரணம்!

(கிளிநொச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் திடீரென வீழ்ந்து மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் ஈருருளியில் பயணித்துக் கொண்டிருந்த இல 682/6 இராமநாதபுரத்தைச் சேர்ந்த குமார்-கருணராஜா (வயது-54) என்பவர் இராமநாதபுரம்-வயலூர் முருகன் கோவிலடியில் திடீரென வீழ்ந்து மரணமானார்.

மேற்படி நபர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்து இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது. மேலதிக வைத்திய பரிசோதனைகளிற்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இவரது சடலம் ஒப்படைக்கப்பட்டது. (15)

# "தாமரை மீன்கள்" சிறுகதைத் தொகுதிக்கு சாகித்திய விருது



(அலுவலக செய்தியாளர்)

டாக்டர்.ச.முருகானந்தன் எழுதிய "தாமரை மீன்கள் சிறுகதைத் தொகுதிக்குத் தேசியசாகித்திய விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இருதசாப்தங்களுக்கு மேலாக அரச மருத்துவராகப் பணிபுரிந்து வரும் இவர் 25 வருடங்களுக்கு மேலாகச் சிறுகதைகள் மற்றும் கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதிவருகின்றார்.

இவரது அண்மைக்காலச் சிறுகதைகள் கொடிய யுத்தத்தின் அனர்த்தங்களை வெளிக்காட்டியுள்ளமை சுட்டிக் கா[illegible]டக்கூடியதொன்றாகும். தரை மீன்கள், அப்பாவும் நானும், வேட்டை [illegible]ரமாச்சு, புதைகுழி, அலியன் யானை முதலான போராட்டகாலத்தைச சித்திரிக்கும் சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளது. இவர் ஏற்கனவே சிறுகதை, கட்டுரைக்கென சென்னை இலக்கியச் சிந்தனைப் பரிசு, முத்தமிழ் விழா சிறுகதைப் போட்டிப்பரிசு உட்பட பதினைந்திற்கு மேற்பட்டபரிசில்களைப் பெற்றுக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

# நவீனமுறையில் மீன்பிடிப்பதற்கான பயிற்சித் திட்டம் நவம்பரில் ஆரம்பம்

(முல்லை)

நவீனமுறையில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான பயிற்சித் திட்டம் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக முல்லை மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு யு.என்.டி.பி திட்டத்தில் மீனவர்களுக்கான பயிற்சி நடாத்தும் திட்டத்தினாலேயே இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அதற்கான ஜி.பி.எஸ் என்ற கருவி 4 தேவைப்படுவதாகவும், ஒரு கருவி வாங்குவதற்கான நிதி தம்மிடம் இருந்தபோதும் மூன்று கருவிகளுக்கான நிதி இன்னமும் தரப்படவில்லையென்றும் மேலும் தெரிவித்தார்.

முல்லை மாவட்ட மீனவர்கள் நவீன வசதிகளுடன் கூடிய மீன்பிடி முறையினைக் கற்று நிறைவான பயன் பெறவேண்டும் என்று தெரிவித்தார். (20)

# யோகர் சுவாமிகள் திருவடி நிலைய 7ஆம் ஆண்டு நிறைவு விழாவில் முதியோர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யோகர் சுவாமிகள் நிருவடி நிலைய முதியோர் இல்லத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும், முதியோர் தின விழாவும் வன்னேரிக்குளம் ஐயனார்புரம் முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம் இல்லத் தலைவர் பொன் நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது.

வில் ஆசியுரையினை தவத்திரு கணேசானந்த சுவாமிகள் வழங்கினார். தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரையினையடுத்து நினைவுரைகளை கிளி. அரச அதிபர்தி.இராசநாயகம், கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து அனுசுயாவின் முதியோர் வாழ உதவுவோம் எனும் நூலினை





நண்பகல் 12.00மணிக்கு கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை மாணவர்கள் முதியோர்களுக்கு மலர் மாலை அணிவித்து ஊர்வலமாக மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை வன்னேரி வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் எழில்குமார் ஏற்றிவைக்க, முதியோர் இல்லக்கொடியினை இல்லத்தலைவர் பொன்.நித்தியானந்தன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து நாட்டுப்பற்றாளர் அமரர் பொன்.வினாயகமூர்த்தியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை துணைவியார் திருமதி.தையல்நாயகி ஏற்றிவைக்க, முதியோர் இல்ல ஸ்தாபகர் அமரர் மு.கந்தசாமியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அன்னாரின் உறவினர் ஏற்றிவைத்தார். அடுத்து நிகழ்

கிளி. அரசஅதிபர் வெளியிட்டு வைக்க முதற் பிரதியினை நாட்டுப்பற்றாளர் பொன். வினாயகமூர்த்தியின் துணைவியார் பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரை யினை இ.கலியுகவரதன் நிகழ்த்தினார். அடுத்து கிளி அரசஅதிபரினால் இல்ல ஆரம்பகால முதியோர்களான ஈஸ்வரப் பெருமாள், திருமதி. பொன் னம்மா ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றனர். தொடர்ந்து டாக்டர் முருகானந்தனுக்கு முதியோர் காவலர் எனும் பட்டமும், த.தம்பியையா விற்கு சமூகநலன் காப்பாளர் எனும் பட்டமும் வழங்கப் பெற்று பொன்னாடை போர்த்திக்கௌரவிக்கப் பெற்றனர். அரசஅதிபருக்கு கணேசானந்த சுவாமிகள் பொன் னாடைபோர்த்திக் கௌரவித்தார். தொடர்ந்து முதியோர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றனர்.

நிகழ்வில் அரச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப்பலரும் பெருமளவில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வவு.இல் புகையிரதத்திணைக்களக் காணியில் குடியேறியோரை வெளியேற்ற நடவடிக்கை

(செட்டிகுளம்)

**வவுனியா மாவட்டத்தில் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் குடியேறிய நானூறிற்கும் மேற்பபட்ட குடும்பங்களை வெளியேற்ற புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

குடியிருப்பவர்களின் விபரங்கள் திரட்டப்படுவதுடன் அவர்களின் வீடுகளுக்குச் சென்று மிக விரைவில் விலகிச் செல்ல வேண்டும் என்று புகையிரதத் திணைக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அத்துமீறிக் குடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு குடியிருப்பவர்கள் நிரந்தரமான கட்டடங்கள் கட்டி, மின்சாரம் தொலைத்தொடர்பு எடுத்துள்ள போதிலும் அவை ஆவணமாகப் பயன்படுத்த முடியாது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நிலத்தடி நீர்வளம் வவுனியாவில் குறைகிறது

வவுனியா மாவட்டத்தில் ஒன்பதாயிரத்து 847 கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் இருக்கின்ற போதிலும் குடிநீருக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதற்குப் பிரதான காரணம் நிலத்தடி நீர் குறைந்திருப்பது என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரசபை எல்லைக்குள் 4ஆயிரத்து 147 கிணறுகளும், தமிழ்ப் பிரதேச செயலாளர் பிரிவில் 4ஆயிரத்து 265 கிணறுகளும், சிங்களப் பிரதேச செயலாளர் பிரிவில் 705 கிணறுகளும், வெங்கள செட்டிகுளம் பகுதியில் 730 கிணறுகளும் உள்ளன. இவை பெரும்பாலும் வீடுகளைச் சார்ந்ததாக உள்ளது. அத்துடன் புதிதாகத் திறக்கப்பட்ட 416 கிணறுகளும், 846 குழாய்க் கிணறுகளும் அடங்குகின்றது.

இதேவேளை நாள் ஒன்றுக்கு வீட்டுப்பாவனைக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஒரு இலட்சத்து 74ஆயிரத்து 213லீற்றர் தண்ணீர் வழங்கப்படுவதாகவும் அரச விடுதிகளுக்கு ஒரு இலட்சத்து 60ஆயிரத்து 997 லீற்றரும், வியாபார ஸ்தலங்களுக்கு ஒரு இலட்சத்து 15ஆயிரத்து 331லீற்றர் தண்ணீரும் வழங்கப்படுவதாகவும், நாள் ஒன்றுக்கு 5இலட்சத்து 53ஆயிரத்து 413லீற்றர் தண்ணீர் விநியோகிக்கப்படுவதாக நீர்ப்பபாசனத்திணைக்களம் தெரிவிக்கின்றது. (21)

# மோட்டார் வண்டிப் பாவனை வவு.மாவட்டத்தில் அதிகரிப்பு

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது வவுனியா மாவட்டத்தில் மோட்டார் வண்டிகளின் பாவனை மிகவும் அதிகரித்திருப்பதாக மோட்டார் போக்குவரத்துப்பிரிவு தெரிவிக்கின்றது.

கடந்த ஆண்டு மட்டும் வவுனியா மாவட்டத்தில் 10ஆயிரத்து 35 மோட்டார் வண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிலும் 9ஆயிரத்து 500 மோட்டார் வண்டிகள் வவுனியா அரச செயலகத்தில் இயங்கும் போக்குவரத்துப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வவுனியா தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 265 மோட்டார் வண்டிகளும், செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 270 மோட்டார் வண்டிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனைவிட கடந்த ஆண்டு இந்த மூன்று பிரதேச செயலாளர் பிரிவிலும், கடந்த ஆண்டு மோட்டார்க் கார்கள் 378, பேருந்துகள் 101, மோட்டார்கோச் 253 , பாரவூர்திகள் 640, சிறியரக வாகனங்கள் 1965 ஆக மொத்தம் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 12ஆயிரத்து 658 வாகனங்களும், செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 398 வாகனங்களும், தெற்குபிரதேச செயலாளர்பிரிவில் 386 வாகனங்களும் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. (21)

## கிராமசேவகர்களுக்கு நேர்முகப் பரீட்சை

(மன்னார்)

கிராம அலுவலர்களுக்கான தரம் உயர்விற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மாதம் நடைபெற விருந்த போதிலும் அது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டது. அதற்கமைய எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் வவுனியாவில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட கிராம அலுவலர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதென உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (மி)

# நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் இரு நாட்கள் வதிவிடப் பயிற்சி

நெடுங்கேணி மகாவித்தியாலயம், சின்னப்பூவரசங்குளம் விக்கினேஸ்வரா வித்தியாலயம், மதியமடு விவேகானந்த வித்தியாலயம், குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை, மாறாவிலுப்பை அ.த.க. பாடசாலை, ஒலுமடு, அ.த.க. பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கான இரு நாள் வதிவிடப் பயிற்சி தமிழீழ கல்விக்கழகம், வன்னி தமிழீழ மாணவர் அமைப்பு வவுனியா என்பனவற்றின் ஒழுங்கிணைந்த ஏற்பாட்டில் போரூட் அனுசரணையுடன் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வின் முதல் நிகழ்வாக மங்கல விளக்கினை வவுனியா மாவட்ட இளைஞர் அபிவிருத்தி இணைப்பாளர் (போரூட்) S.L அன்ரன் லாஸரன் அவர்களும், நெடுங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.இந்திரராஜா அவர்களும், உதவித் திட்ட இணைப்பாளர் (போரூட்) ஐ. லோகநாதன் அவர்களும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் த.சுபாஸ் அவர்கள் ஏற்றிவைத்தார். வலயக் கொடியினை வவுனியா வடக்கு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. மோகநாதன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

பாடசாலைஅதிபர்மு.குகதாசன் தலைமையுரையை நிகழ்த்தினார். தொடர்ந்து வன்னி மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் எஸ். ஞானம், பிரதிக் கல்விக் பணிப்பாளர் த. மேகநாதன், போரூட உதவித் திட்ட இணைப்பாளர் ஐ.லோகநாதன் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர். தொடர்ந்து பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. நூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டுள்ளனர். பயிற்சி முடிவில் மாணவர்களிற்கு சான்றிதழ்களும், ஒவ்வொரு பாடசாலைகளிற்கும் வழங்கப்பட்டன.

# 48 சாரணிய மாணவருக்கு சின்னம் சூட்டப்பட்டது

முல்லைத்தீவு வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் சாரணிய சின்னம் சூட்டும்விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நண்பகல் 1.30 மணிக்கு சாரணியப் பொறுப்பாசிரியர் சி.சிவாகுகன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கலவிளக்கினை பாடசாலையின் உபஅதிபா திருமதி.M R.றோபேட் ஏற்றினார்.

தமிழீழ தேசியக்கொடியினை முல்லைக் கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் வே.ஜெயம் சபாபதி ஏற்றனார். பாடசாலைக் கொடியினை பாடசாலை அதிபர் S. யோகேஸ்வரன் ஏற்றினார்.

சாரணியக் கொடியினை இப்பாடசாலையின் சாரணியப் பொறுப்பாசிரியர் சி.சிவாகுகன் ஏற்றினார். வாழ்த்துரையினை சாரணிய உதவி ஆணையாளர் வே.ஜெயம்சபாபதி நிகழ்த்தினார். 48 சாரணர்களுக்கான சின்னத்தினை சாரணியப் பொறுப்பாசிரியர் சி.சிவாகுகன், அதிபர் சி.யோகேஸ்வரன், சாரணிய உதவி ஆணையாளர் வே.ஜெயம்சபாபதி ஆகியோர் சூட்டினார்கள்.

இந்நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(20)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் ஊர்காவற்துறையில் உள்ள நாரந்தனை உதராப்பிட்டி வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கென 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சியில் உள்ள மட்டுவில் சோமஸ்கந்தா வித்தியாலயத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்கென ஜேர்மன் தொழில்நுட்பநிறுவனம் 45 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி பாடசாலையைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (GTZ) இந்நிதி உதவியை வழங்கியுள்ளது. இந்நிதிமூலம் மேற்படி பாடசாலையைப் புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(33)

## விரைவில் திறக்கப்படும்

(பூநகரி)

நிகொட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பூநகரி நல்லூர் ம.வித்தியாலய இரண்டு மாடிக்கட்டடம் வெகுவிரைவில் திறக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (34)

# சமாதான சக வாழ்வுத்திட்டத்தின் கீழ் 30 தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்குப் பயிற்சி

### தமிழ்–முஸ்லிம் சமூகங்களுக்கிடையே, இவர்கள் கருத்திணக்கத்தை ஏற்படுத்துவர்

(திருகோணமலை)

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிண்ணியாப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சமாதான சகவாழ்வுத் திட்டத்தின் கீழ் முப்பது தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ (வொங்கோட்-VOVCOD) அமைப்பு அப்பயிற்சி நெறியை நடத்தியது. தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே கருத்திணக்கத்தை உருவாக்கும் முயற்சியில் இப்பயிற்சி பெற்ற தமிழ்,முஸ்லிம் இளைஞர், யுவதிகள் கிண்ணியாப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முஸ்லிம், தமிழ்க் கிராமங்களில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. சமாதான சுகவாழ்வு செயற்றிட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற முஸ்லிம், தமிழ் இளைஞர், யுவதிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு உப்புவெளியில் அமைந்துள்ள மாகாணசபை விருந்தினர் விடுதியில் வொங்கோட் அமைப்பின் தலைவர் த.கணேஸ் தலைமையில் நடைபெற்றது. யு.எஸ். எயிட் திருமலை திட்டமுகாமையாளர் செல்வி. பிரண்டாபாரட் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாகக் கிண்ணியாப்பிரதேசச் செயலாளர் எம்.சி.எம்.ஷெரிப், சமாதான சமூக நடவடிக்கை அமைப்பின் இயக்குனர் ரி.தயாபரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபற்றினர். கௌரவ விருந்தினர்களாகத் திருமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியச் செயலாளர் என்.சிங்காரவேலு, மனிதாபிமான நிறுவனங்கள் ஒன்றியத்தின் மாவட்ட அலுவலர் வி.கலைச்செல்வன், யு.என்.டி.பி திட்ட உதவியாளர் டொறின்பெர்னாண்டோ, மாவட்ட இணைப்பாளர் ஜெயமுருகன், செடோ தலைவர் ஏ.எஸ்.எம்.ஹைதர் சலாம் ஆகியோர் பங்குபற்றினர். (25)

# வறியமாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையத்தைச்சூழ உள்ள பிரதேசங்களில் வாழும் வறியமாணவர்களுக்கு யாழ்.கல்வி வளர்ச்சிக்கழகத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

வரி சனசமூகநிலைய மண்டபத்தில் அவ்வூர் கிராம சேவையாளர் சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ். வலிகாம பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மூவேந்தன் மற்றும் யாழ். மாவட்டத்தமிழ் மாணவவர் ஒன்றியத் தலைவர் குலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

இந்நிகழ்வில் சுமார் 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (33)



நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "பொங்குதமிழே" பாடல் இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் பொதுச் சுடரினை லெப்.கேணல் தூயவனின் தந்தையார், சகோதரி ஏற்றுவதையும், வெளியீட்டுரையை விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்- சீலன்)

# ஏட்டிக்குப் போட்டியாக அரசிற்குள் குழிபறிப்பு!

உப்புள் ஜோசப் பர்ணாந்து
(லங்காதீப)
மொழியாக்கம்:-வடிவேல்

சந்திரிகா கூட்டணி அரசில் பிரதான அங்கம் வகிக்கும் ஜே.வி.பி யினர் 2004 ஏப்ரல் 2 ஆம் திகதிக்கு முன்பு சந்திரிகாவுக்குப் பல வழிகளிலும் அழுத்தம் கொடுத்து வந்தனர். அப்போதைய ரணில் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சுவீகரிக்க வேண்டும் என்றும், ரணிலின் அரசை கலைத்துவிட வேண்டும் என்றும் கூக்குரலிட்டனர்.

சந்திரிகா மேற்படி நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக நடத்தப்பட்ட முதலாவது பரீட்சையே தேசிய லொத்தர் சபையை அவர் சுவீகரித்தமையாகும். அதற்கு லொத்தர் சபையில் மோசடி நடைபெறுவதாக அன்று சந்திரிகாவால் காரணம் கூறப பட்டதுடன் அதனை நியாயப்படுத்திய ஜே.வி.பி நாட்டின் நிர்வாக அதிகாரத்தையும் சந்திரிகா சுவீகரிக்க வேண்டும் எனக் கோரியது.


சந்திரிகா


விமல்வீரவன்ச

அதே சனாதிபதி இன்று ஆயிரம் குளங்களை அமைக்கும் ஜே.வி.பி யின் திட்டத்தில் மோசடி இருப்பதாகக் கூறுவதை வார இறுதிப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது. ஆயினும் தலைவி இவ்வாறு மோசடி நடந்ததாகக் கூறுவது தனது கட்சி (சிறில.சு.க) உறுப்பினர்களின் ஊழல் மோசடி அம்பலத்துக்கு வந்துவிடக்கூடாது எனக் கருதுவதாலாகும் என ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சரான அனுர குமார திசாநாயக்க உரத்த குரலில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தற்போது சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜே.வி.பிக்கு வழங்கிய அமைச்சுப் பதவிகளைப் பறித்து விடுவாரா? என அனைவரும் இதைப்பற்றியே பேசிக்கொள்கின்றனர். சந்திரிகாவுக்கு ஐ.தே கட்சி அமைச்சுக்களை சுவீகரிக்கப் போதித்ததும் ஜே.வி.பி யினரே வேறு விதமாகக் கூறினால் ஐ.தே.கட்சியைத் தாக்க சந்திரிகாவுக்கு தடியெடுத்துக் கொடுத்ததும் ஜே.வி.பி யினரே.

தற்போது அதே தடியால் ஜே.வி.பியை தாக்க நினைத்தால் ஜே.வி.பி யினர் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கத்தை அமைத்த சந்திரிகா இப்போது அவர்களை மட்டந்தட்ட நினைப்பதாக தோன்றுகிறது. என்ன நடந்தாலும் விடுதலைப் புலிகள் யுத்தத்தை விரும்பமாட்டார்கள். அதேபோல சந்திரிகா கூட்டணியை விட்டும் ஜே.வி.பி பிரியாது. இது சந்திரிகாவுக்கும் உறுதியாகத் தெரியும். ஜே.வி.பியானது கூட்டணிக்குள் தமது செல்வாக்கை அதிகரிக்க எடுக்கும் தந்திரமும் அவருக்குத் தெரியும். அதற்காக ஆயிரம் குளங்களை அமைத்து வட மத்திய மாகாணம் உட்பட நாட்டில் வாழும் விவசாயிகளின் செல்வாக்கைப் பெற முயற்சிப்பதும் தெரியும். குளங்களை அமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினரூடாக தனது அரசியல் செல்வாக்கை உயர்த்த ஜே.வி.பி திட்டமிடுவதையும் சந்திரிகா அறிவார்.

கைத்தொழில் மையங்களுக்குச் சென்று தொழிலாளர்களின் ஆதரவையும், பல்கலைக் கழகம் சென்று மாணவர்களின் ஆதரவையும் பெற்ற ஜே.வி.பி தற்போது விவசாய அமைப்புக்களிடம் சென்று விவசாயிகளின் அரசியல் செல்வாக்கைப் பெற முயன்று வருகின்றது. கிராமப் புறங்களில் வாழும் மக்களை கொழும்புக்கு அழைத்து அரசியல் பற்றிப் போதித்து, தனது செல்வாக்கை வளர்க்க ஜே.வி.பி திட்ட மிடுகிறது. அதனை விளங்கிக் கொள்வது சந்திரிகாவுக்கு ஒன்றும் அரிதான செயலல்ல.

இவ்வாறு விளங்கிக்கொண்டமையே அவர் குளம் அமைப்புப் பணிகளில் மோசடி நடப்பதாகக் கூறும் புரளியாகும். ஆயினும் இதன் மூலம் ஒரு கல்லில் இரு மாங்காயை விழுத்த முனைகிறார். ஒன்று ஜே.வி.பி விவசாயிகளின் செல்வாக்கைப் பெற எடுக்கும் முயற்சியை தடுத்தல். அடுத்தது அரசைக் கவிழ்க்க ஜே.வி.பி எழுப்பும் கோஷத்தையும், அரசாங்கத்தின் பாவங்களில் இருந்து ஜே.வி.பி விலகிக் கொள்ள எடுக்கும் விளையாட்டையும் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கையின் ஒரு முயற்சியாகவும் அமையலாம். ஜே.வி.பி அரசைக் கவிழ்க்க வேண்டும் என கோஷமிடுவதையும் சந்திரிகா நியமித்த அதிகாரிகளுக்கு எதிராக ஜே.வி.பி எழுப்பும் குற்றச் சாட்டுக்களையும் அவரால் பொறுத்துக் கொள்ள முடியாதுள்ளது. ஜே.வி.பி யினர் இவ்வரசாங்கம் பதவியேற்றது முதல் கல்வி மற்றும் நிதியமைச்சுச் செயலர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தி வருகின்றனர். சந்திரிகா தனது அரசாங்கத்தையும், கூட்டணியையும் பாதுகாத்துக் கொள்வதற்காகவே வாய்திறக்காதிருக்கிறார். ஜே.வி.பி தன்னை பிரிந்து செல்லாது என உறுதியாக தெரிந்துகொண்ட பின்னரும் அவர்கள் கம்பி நீட்ட தலைப்படுகின்றனர். எனினும் இவர்களைக் கழுவிக்கழுவி சேற்றில் போடவே சந்திரிகா முயல்கிறார்.

இது சாத்தியமாகுமா? அவருக்கு இது ஒன்றும் கடினமாக இராது காரணம்.

ஜே.வி.பி கூட்டணியை விட்டுப் பிரியாது என்பதில் அவருக்கு நம்பிக்கையிருக்கின்றது. ஆனால் ஜே.வி.பியோ சிறிது சிறிதாக அரிக்கும் புழுப்போன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அழிவுக்கு இட்டுச்செல்ல முயல்கின்றது. இந்த நோக்கம் நிறைவேறாமல் ஜே.வி.பி கூட்டணியை பிரிந்து சென்று விடாது. இக் கூட்டணி ஒரு பெண்ணுக்கும், ஆணுக்கும் இடையிலான விவாகம் போன்றது. அதனைப் பாதுகாப்பது இரு பிரிவினரதும் பொறுப்பு எனவும் தேவை எனவும் வெளிநாட்டுப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சந்திரிகா அண்மையில் தெரிவித்தார்.

உண்மையில் அதுபோன்ற ஒன்றே சந்திரிகாவின் கூட்டணி அரசும், ஆண் அதிகாரம் செய்தால் பெண்ணுக்குத் துன்பம். பெண் அதிகாரம் செய்தால் ஆணுக்குத் துன்பம் விவாகரத்து ஏற்படும் வரை சண்டை சச்சரவே ஏற்படும்.

ஆயினும் சந்திரிகா விவாகரத்து செய்யாமல் வீட்டுக்குள்ளேயே ஆளை முடிக்கும் செயலில் இறங்கியிருக்கிறார். அதுபோன்ற செயலே தற்போது ஜே.வி.பி மீது சுமத்தப்பட்டுள்ள குளம் அமைக்கும் திட்டமோசடியாகும். ஜே.வி.பி குளங்களை அமைக்கும் பணியை மேற்கொண்டமை அன்று பிரேமதாச ஆயிரம் வீடுகள், ஆயிரம் ஆடைத்தொழிற்சாலைகள், நூற்றுக்கணக்கான கிராமங்கள் அமைக்கும் பணியை ஒத்ததாகும். ஆயினும் இத்திட்டங்கள் தோன்றுவதற்கு முன்பு அரசாங்கம் வீடுகள், கிராமங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றை நிறுவாதிருக்கவில்லை. எனினும் பிரேமதாசா அவற்றுக்குப் புதுவடிவம் மட்டுமே கொடுத்தார். அதே போன்று தற்போது குளங்கள் அமைப்பது புதிய வேலைத் திட்டமல்ல. அரசாங்கம் மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனங்களும் குளங்களை அமைத்துக் கொடுத்தன.

உண்மையில் ஒரு அரசாங்கம் என்பது அரசசார்பற்ற நிறுவனமல்ல. அரசாங்கம் நிதியை ஒதுக்கீடு செய்யும் முறையொன்றைக் கொண்டுள்ளது. அதற்கான சட்ட விதிகள் இருக்கின்றன. இந்த விதிமுறைகளுக்கப்பால் ஜே.வி.பி இந்தக் குளம் அமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளது என்பதே சந்திரிகாவின் குற்றச்சாட்டாகும். அத்துடன் இத் திட்டத்தினால் அரசியலமைப்பு விதிகளும் மீறப்பட்டிருப்பதாக மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார்.

மைத்திரிபால சிறிசேன 2004 ஆம் ஆண்டு தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு விவசாயிகளின் ஆதரவைப் பெற்றுக் கொண்டவராவார். ஏனைய மாவட்டங்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் ஜே.வி.பி பக்கம் திரும்பிய வேளை சிறிசேன மட்டுமே தனது கட்சி மக்களை பாதுகாத்தவர் ஏனைய மாவட்ட மக்களை ஜே.வி.பி கவர்ந்தது போன்று வட மத்தியமாகாண மக்களையும் குளம் அமைக்கும் பணி மூலம் திசைதிருப்ப முனைகிறது. மகாவலி பிரச்சினை உருவானதற்கும் இதுவே காரணம், அநுராதபுர மாவட்டத்தில் பேர்ட்டி பிரேம்லாலும், பொலனறுவை மாவட்டத்தில் மைத்திரிபால சிறிசேனவும் விவசாயிகளின் தலைவர்களாக திகழ்கின்றனர். இவர்கள் இருவருமே தற்போது ஆயிரம் குளங்கள் அமைத்தலுக்கு எதிர்ப்புக் காட்டுகின்றனர். அதற்குக் காரணம் தமது சிறில சு.கட்சியை பாதுகாப்பதாகும். இதன் முடிவு என்னவாகும்? இதன் முடிவு அரச சட்ட விதிகளுக்கும், செயற்படுத்தலுக்கும் பொருந்தும், ஏதாவது ஒரு அமைச்சு அதிகாரி சட்டவிதிகளுக்கு மாறாக அரச நிதியை பயன்படுத்துவராயின் அது ஊழல் மோசடி ஆணைக்குழுவின் விசாரணைக்கு உள்ளாகும். அல்லது நீதிமன்றம் விசாரணை. நடத்தும் ஜே.வி.பிக்கு எதிராக சனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கைவைக்கும் முதலாவது ஆயுதம் அதுவாகும். அதனை செயற்படுத்தாமல் வெறும் அச்சுறுத்தல் மூலம் ஜே.வி.பியை கட்டுக்குள் வைத்திருப்பது சந்திரிகாவின் உபாயமாகலாம். இவ்விவகாரத்தை அவர் பகிரங்கமாக எவ்விடத்திலும் கூறாமல் ரகசியங்களைப் பேணும் அமைச்சரவையில் மட்டுமே வெளிப்படுத்தினார். ஜே.வி.பி யுடன் மோதலுக்குச் செல்லாது குற்றச்சாட்டைக் காட்டுவது மட்டுமே அவரின் நோக்கமாகும். இவ்வளவையும் ஜே.வி.பி பார்த்துக்கொண்டு சும்மா இருக்குமா? அப்படிக் கருதமுடியாது. சந்திரிகா அமைச்சரவையில் குசுகுசுத்ததை ஜே.வி.பி பத்திரிகைகளில் வெளிவரும் வகையில் ஆரவாரித்தனர். அவ்வாறு கோஷமிடுவதுடன் நின்று விடாது சந்திரிகாவின் அதிகாரிகளும் ஊழலில் ஈடுபட்டிருப்பதை வெளியிடப் போவதாகக் கூறுகின்றனர்.

*1970-1977* காலப்பகுதியிலும் இவ்வாறான நிலை ஏற்பட்டது. அப்போது லங்காசமசமாஜக்கட்சி சிறிமாவின் முன்னணியிலிருந்து நீக்கப்பட்ட போது எழுந்த பிரச்சினையாகும். தம்மை நீக்கியதற்குக் காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், முதலாளி வர்க்கத்துக்கும் நன்மை ஏற்பட வேண்டும் என சிறிமா கருதியதாகும் என ல.ச.ச கட்சி கூறியது. அத்துடன் சிறிமா கூட்டு முன்னணிக்கு பெரும் பங்காற்றிய இலங்கரத்தினாவும் என்.எம் பெரேராவும் சொந்த தேவைக்காக அரச அதிகாரத்தைப் பயன்படுத்தினர் என்றும் சிறிமா குற்றச்சாட்டினார். அதன் பிறகே சிறிமா மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டு வரப்பட்டது.

இந்த வரலாற்றுச் சம்பவம் மீண்டும் தொடராமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளுக்கும் உள்ளது.

"இவ்வரசாங்கம் முடிவுக்கு வந்துவிடும் என ஐ.தே.க சிறிகோத்தாவில் கொண்டாடுகிறது". என அன்று இலங்கரத்னா கூறியது போன்று இன்று மைத்திரிபால சிறிசேன கூறாதிருக்க பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுபபை சந்திரிகாவைப் போன்று ஜே.வி.பியும் மனதில் கொள்ள வேண்டும்.

# கமக்கார அமைப்புக்களின் சங்கமத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் கமக்கார அமைப்புக்களுக்கான மாதாந்த சங்கம நிகழ்வு துணுக்காய் கமநல சேவை நிலைய மண்டபத்தில் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கு.சசிக்குமார் தலைமையில் இடம பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லை.மாவட்ட அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சு.சின்னன்ணன் ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் விவசாய உபகரணங்கள் வழங்கல் தொடர்பாகவும் 2004, 2005 இற்கான காலபோக நெற்செய்கை சம்பந்தமாகவும் விதைநெல் உற்பத்திக்கான பயனாளிகள் தெரிவும் கால் நடைகள் கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் எதிர்வரும் மாவீரர் தினத்தை பிரதேச ரீதியாக மிகவும் சிறப்புடன் முன்னெடுத்தல் சிரமதானப் பணிகள் போன்ற கருத்துக்களை துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.சுப்பிரமணியம், கமநல சேவை போதனாசிரியர் திருமதி. சிவபாலன், துணுக்காய் காவல் துறைப்பணிமனை பொறுப்பாளர் கமல்ஶ்ரீ, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சின்னன்ணன் துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். இந்நிகழ்வில் கமக்கார அமைப்புக்கள் விவசாயிகள் கலந்துகொண்டனர். (24)

## பால் மா விலையை மீள் பரிசீலிக்க முடிவு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் பால் மா விலைகளை அதிகரிக்கக் கோரி பால்மா உற்பத்தியாளர் விடுத்த வேண்டுகோளை மக்கள் நுகர்வோர் அதிகார சபை நிராகரித்துள்ளது. இவர்களின் வேண்டுகோளை மீள் பரிசீலனை செய்வதாக மக்கள் நுகர்வோர் அதிகார சபை ஏற்றுக் கொண்டுள்ளது.

# கடந்த வாரத்தில்

## 07.10.2004-13.10.2004

### 07.

*பாகிஸ்தானின் மத்திய நகரான முல்தானில் மத ஊர்வலம் இடம்பெற்ற வேளை 2 குண்டுகள் வெடித்ததில் 38 பேர் பலி, 100 பேர் காயம்.

* சீனாவிலுள்ள ஆரம்பப் பாடசாலை யொன்றில் ஆசிரியர் ஒருவரின் கத்திக் குத்துக்கு இலக்காகி 4 மாணவர்கள் பலி. 12 பேர் காயம்.

*தாய்வானுக்கு நவீன ஆயுதங்களை விற்பனை செய்ய வேண்டாமென சீன சனாதிபதி அமெரிக்க சனாதிபதியிடம் வேண்டுகோள்.

* இஸ்ரேலுக்கும், எகிப்துக்குமிடையிலான எல்லைப் பகுதியிலுள்ள கில்ரன் ரபா ஹோட்டலில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த இஸ்ரேலியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல்களில் 20 பேர் பலி. 135 பேர் காயம்.


அச்சத்தால் வெளியேறும் உல்லாசப் பயணிகள்

* ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கினிபிஸோவின் இராணுவத்தளபதி ஜெனரல் லெரிசிமியோ கொரியே சிபிரி அந்நாட்டு இராணுவத்தால் சுட்டுக் கொலை.

* பாகிஸ்தானில் சுனி முஸ்லிம்களின் பேரணி மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலைக் கண்டித்து நூற்றுக் கணக்கானோர் முல்தான் நகரில் ஆர்ப்பாட்டம்.

### 08

* ஆஸ்திரியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் எல்பிரீட் ஜெலினிக் இவ்வாண்டு இலக்கியத்துறைக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

* ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் பகுதியில் அமெரிக்க இராணுவ முகாமொன்றின் மீது எறிகணைத் தாக்குதல்.

* பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் 16 ஆவது மாவட்டத்தின் வெளிப்பகுதியில் அமைந்துள்ள இந்தோனேஷியத் தூதரகத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 10 பேர் காயம்.

* ஈராக்கின் தென்நகரான பலூஜாவில் அமெரிக்கப் படையினர் நடத்திய வான் வழித்தாக்குதலில் 11 பேர் பலி. 17 பேர் காயம்.

*ஈராக்கின் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பலூஜா நகரில் திருமணவைபவம் ஒன்று இடம்பெற்ற வேளை அமெரிக்க இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் மணமகன் உட்பட 11 பேர் பலி.17 பேர் காயம்.

### 09

* பாகிஸ்தானிலுள்ள நீர் மின்சார உற்பத்தி நிலையத்தில் பணியாற்றிய சீனப் பொறியியலாளர்கள் இருவர் பாகிஸ்தான் தீவிரவாதிகளால் கடத்தல்.


அசாமில் வெள்ளம்

* இந்தியாவின் அசாம் மாநிலத்தில் பெய்த மழை காரணமாக 68 பேர் பலி.100 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியது.

* காஸாப்பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 7 பலஸ்தீனர்கள் பலி.


தாக்குதல் நடைபெற்ற பகுதி

* அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பிரதமர் ஜோன்ஹவாட் தலைமையிலான கொன்சவேட் கூட்டணிக் கட்சி 4 ஆவது தடவையாகவும் வெற்றி.

* ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது இடம்பெற்ற வன்முறைகளில் 40 இற்கும் அதிகமானோர் பலி.


வாக்களிக்கக் காத்திருப்பு

### 10

* பாகிஸ்தானின் தலைநகர் கராச்சியிலுள்ள சியாமுஸ்லிம்களின் பள்ளிவாசல் மீது தற்கொலைக் குண்டுதாரியால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 7 பேர் பலி. 13 பேர் காயம்.


ஈராக்கில் ரம்ஸ்பீல்ட்

* அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் ஈராக்கிற்கு விஜயம்.

* பங்களாதேஷில் உள்ள கலிதா ஜியா தலைமையிலான அரசைப் பதவி விலகக் கோரி எதிர்க்கட்சியான அவாமிலீக் போர்கொடி உயர்த்தியுள்ளது.

* ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள எண்ணெய் அமைச்சகத்தின் அருகே இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 27 பேர் பலி.16 பேர் காயம்.

*றியோடி ஜெனிரோவிலுள்ள சிறைச்சாலை ஒன்றிலிருந்து 50 கைதிகள் தப்பிச் சென்றனர்.

*கொங்கோ குடியரசின் கிழக்குப் புறமாக உள்ள இவு ஏரியில் 2மோட்டார்ப் படகுகள் கவிழ்ந்ததில் 50 பேர் பலி.

### 11.

*ஈராக்கிய சியா தீவிரவாதிகள் ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவும் அமெரிக்கப்படைகள், அரசாங்கப்படைகள் ஆகியவற்றிற்கு எதிரான தாக்குதல்களை நிறுத்தவும் முன் வந்ததையடுத்து ஆயுத ஒப்படைப்பு ஆரம்பம்.


ஆயுதம் சேகரிப்பு

*பாகிஸ்தானிலுள்ள லாகூர் நகரில் உள்ள ஷியா முஸ்லிம்களின் மசூதியில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட வேளை தொழுகையில் ஈடுபட்டிருந்த 7பேர் பலி, 20பேர் காயம்.

*ஆபிரிக்காவின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான நைஜீரியாவில் எண்ணெய் விலையை அதிகரிக்கக்கோரி 4 நாள் வேலைநிறுத்தம்.

*ஈராக்கில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட இரும்புக்கழிவுகளில் இருந்து வெடிக்கும் நிலையில் 300 குண்டுகள் கண்டுபிடிப்பு.

*20 ஆண்டுகால தலைமறைவு வாழ்க்கையில் இருந்த நக்ஸலைட்டுத் தலைவர்கள் ஆந்திரா அரசுடன் பேச்சு நடத்த முடிவு.

*கொங்கோவின் அமைதிப்பணியில் இந்தியா அதிக இராணுவத்தை அனுப்பத் தீர்மானித்துள்ளது. இராணுவ அமைச்சகச் செயலாளர் அஜய்விக்கிரம சிங் டில்லியில் தெரிவிப்பு.

*அமெரிக்க இராணுவத்திற்கு உதவிய துருக்கி நாட்டைச்சேர்ந்த ஒப்பந்தக்காரர்களையும், அவரது மொழி பெயர்ப்பாளர்களையும் தீவிரவாதிகள் ஈராக்கில் வெட்டிக்கொலை.

*சோமாலியாவில் இடம் பெற்ற தேர்தலில் சனாதிபதியாக அப்துல்லா யூதர் தெரிவு.

*இந்தியாவில் ஆளில்லாமல் குறிப்பிடப்பட்ட இலக்குநோக்கிப் பறக்கும் "லக்ஷயா" விமானம் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

### 12.


கோரியின் பாய்ச்சல்

*பாகிஸ்தான் (கோரி-05) ஏவுகணையினை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

* அமெரிக்காவின் வோஷிங்டன் நகருக்கு அண்மையில் உள்ள ஹெலன் எரிமலை வெடித்துச்சிதறியது.


எரிமலை வெடிப்பில்

* சென்னையில் இருந்து குவைத்துக்குப் புட்டாசுகள் கடத்திய குவைத் நாட்டைச் சேர்ந்த விமான நிறுவன ஊழியர்கள் இருவர் தமிழகத்தில் கைது.

* சவுதி அரேபியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் படி அந்நாட்டுக்கு பயிற்சிப் போர் விமானங்களை பாகிஸ்தான் வழங்கியது.

### 13.

*ஈராக்கின் புனரமைப்பிற்கென உதவி வழங்கும் நாடுகள் குழுவின் 2 நாள் கூட்டம் டோக்கியோ நகரில் ஆரம்பம். இதில் 55நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

*மகாராஸ்டிரா மாநிலச் சட்டச்சபைக்கான தேர்தல் வாக்குப்பதிவுகள் இடம் பெற்றது.

# இடைக்காலக் கொடுப்பனவு வழங்க முடியாது

# 2005 இல் சம்பள அதிகரிப்பே கிடைக்கும்

## - சனாதிபதி கல்வியமைச்சுக்கு அறிவிப்பு

இடைக்காலக் கொடுப்பனவு வழங்கமுடியாது: ஆனால் 2005 சனவரியிலிருந்து நிச்சயமாகச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவிக்கும்படி சனாதிபதி தம்மைப்பணித்திருப்பதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் தாராடிமெல் தெரிவித்துள்ளார்.

தம்மை வியாழன் சந்தித்துப் பேசிய இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிடம் அவர் இதனைத் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 16 கோரிக்கைகளில் இடைக்காலக் கொடுப்பனவாக மாதம் மூவாயிரம் ரூபா வழங்க வேண்டும் என்பதும் அடங்கியிருந்தது. அக்கோரிக்கை பற்றி ஆராய்ந்த போதே தாராடிமெல் இதனைத் தெரிவித்தார். என்று சங்கப் பொதுச்செயலாளர் த.மகாசிவம் கூறினார்.

வடக்கு கிழக்கு மாகாண அதிபர், ஆசிரியர்களுக்குச் சம்பள நிலுவை வழங்க 325 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது என்று சங்கத்தின் தூதுக்குழு தெரிவித்த போதுதான் இது பற்றி மாகாணசபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும். நிதி ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு ஆவண செய்வதாகத் தாராடிமெல் உறுதியளித்தார்.

இடைக்காலக் கொடுப்பனவு வழங்குவதற்குத் திறைசேரியிடம் பணம் இல்லை என்றும் தாராடிமெல் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு தமிழ்மொழி மூலக் கல்வி தொடர்பான அவசர அலுவல்களைக் கவனித்து நடவடிக்கை எடுக்க நியமிக்கப்பட்ட விசேட செயலணி நவம்பர் 5 ஆம் திகதி தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்றும், அன்றைய தினம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் கல்வி அமைச்சுச் செயலாளருக்கும் இடையில் அடுத்த சந்திப்புக் கொழும்பில் இடம்பெறும் என்றும் சந்திப்பின் முடிவில் தெரிவிக்கப் பட்டிருந்தது. (25)

# பயிர்ச்செய்கைக்கு கடனுதவி

பூநகரிப் ப.நோ.கூ.சங்கத்தால் மானாவாரிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளில் 100 பேருக்கு முதற் கட்டமாக தலா 10,000 ரூபா வழங்கப்படவுள்ளது. அப்பத்தாயிரம் ரூபாவில் 5000 இற்கு விவசாய உள்ளீடுகளும் மிகுதி 5000ரூபா பணமாகவும் வழங்கப்படும் என ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தலைவர் கா.கார்த்திகேசு அறிவித்துள்ளார். (34)


அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த முன்னாள் அதிபர் த.நிரதாம வீரலிங்கம் அவர்களின் நினைவாக அம்பலவன்பொக்கணையில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடம். (படம்:- தவரட்ணம்)

# சிறிலங்காவில் சமாதான முன்னெடுப்புக்கள் எவ்வளவு கடினமானதென்பதை உணர்கிறோம்

## -காமன்வெல்த் பாராளுமன்றக்குழு உறுப்பினர் கருத்து

(கொழும்பு)

**சிறிலங்காவில் சமாதான முன்னெடுப்புக்கள் எவ்வளவு கடினமானது என்பதை நாங்கள் உணர்கிறோம். எனினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சமாதானப் பேச்சுக்களே ஒரே வழியாகும் என்று காமன்வெல்த் பாராளுமன்றக்குழு உறுப்பினர் கிரெஹாம் அலென் தெரிவித்தார்.**

தற்போது சிறிலங்காவிற்கு விஜயம் செய்திருக்கும் காமன்வெல்த் பாராளுமன்றக் கழகத்தின் பிரிட்டிஷ் கிளைத் தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்குபவரும், பிரிட்டிஷ் பாராளுமன்றின் தொழிற்கட்சி உறுப்பினருமான கிரெஹாம் அலென் வெள்ளிக்கிழமை ஊடக மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த போது மேலும் கூறுகையில்;

"முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேஜர் வடஅயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். பின்னர் தற்போதைய பிரதமர் ரொனிபிளேயர் அதனை முன்னெடுத்துச் சென்றார். ஐக்கிய இராச்சியத்தின் அனைத்துச் சமூகங்களும் வட அயர்லாந்து சமாதானத்தில் இருந்து அனுகூலத்தினைப் பெறுகின்றன. இது சிறிலங்காவிற்கு ஒரு முன்மாதிரியாக அமையும் என நான் கருதுகின்றேன்.

சிறிலங்காவில் சமாதான முன்னெடுப்பு எவ்வளவு கடினமானது என்பதை நாங்கள் பார்த்தோம்.

சமாதானத்தின் பரிசு மிகவும் உன்னதமானது. ஆகவே அனைத்துக் கட்சிகளும் மேசையில் அமர்ந்து பேசவேண்டும். சமாதான நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்."

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சமாதானப் பேச்சுக்களே ஒரே வழி. ஆனால் இது சொல்வதற்கு மிகவும் சுலபமானது. பேச்சு மேசையைச் சுற்றி அனைவரும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடுவதற்கு உட்காருவது மிகக்கடினமானது. ஆனாலும் பிரச்சினையுடன் தொடர்புடைய அனைத்துக் கட்சிகளும் பொறுமையாக இருக்க வேண்டும்.

வெற்றிகரமான தீர்வொன்றை எட்டுவதற்கு அவர்கள் பேச்சு மேசையில் அமர்ந்து பேச வேண்டும். பேச்சுக்களில் இருந்தே வேண்டியதைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அடையலாம்" என்று கூறினார்.

## வாகன விபத்து

பொலன்னறுவை மாவட்டம்ஹபரணையில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இத்தாலிய உல்லாசப் பயணிகள் இருவர்பலியானார்கள். மேலும் 5 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

## மேஜர்தர அதிகாரியின் இல்லத்தில் ஆயுதங்கள், வாகனம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்ட இராணுவமுகாம் மேஜர் ஒருவரின் வீட்டைப் பொலிசார் சோதனையிட்டபொழுது கொள்ளையடிக்கப்பட்ட வாகனம் ஒன்றும், 30கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப்பொலிசாரும், வத்தேகமப் பொலிசாரும் கூட்டாக வத்தேகமயில் உள்ள அவரின் வீட்டைச் சோதனையிட்டனர். மேலும் அவரின் வீட்டில் கைத்துப்பாக்கிகள், வாள், கத்தி, வீடுகளில் இருந்து திருடப்பட்ட பெறுமதியான பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

## வரவு-செலவுத் திட்டத்தில் 1500 ரூபா சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

வரும் நவம்பர் மாதம் அரசு சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத்திட்ட யோசனைகளில் அரச ஊழியர்களின் சம்பளத்தை 1,500 ரூபாவால் அதிகரிக்கவும், தற்போது வழங்கப்படும் 2,250 ரூபாவை அடிப்படைச் சம்பளத்தில் சேர்த்துக்கொள்ளவும் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1,500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதால் அரசுக்கு 30 மில்லியன் ரூபா செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் எரிபொருள் விநியோகத்தில் பங்கீட்டு முறையை அறிமுகப்படுத்தவும் எதிர்பார்க்கிறது. இது நடைமுறைக்கு வரும் போது தற்பொழுது நிவாரணம், சமுர்த்தி உதவிகள் பெறுவோர் மேற்படி பங்கீட்டு அட்டைபெறத் தகுதியுடையோராகக் கருதப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பங்கீட்டு அட்டையில்லாதோர் சந்தை விலைக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

## - ரூ.700 மில்லியன் மேலதிக செலவிலான-

# சிறிலங்கா துறைமுக அதிகார சபையின் கணினி வலையமைப்புத் திட்டம் நிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா துறைமுக அதிகார சபையின்கணினிவலையமைப்புத் தொடர்பான திட்டம் ஒன்று தடுக்கப்பட்டுள்ளது. துறைமுக அதிகார சபையின் முன்னைய நிர்வாகம் தவறான முறையில் நடைமுறைப் படுத்த முனைந்த திட்டம் ஒன்றைத தாம் இனங்கண்டு தடுத்துள்ளதாகத் துறைமுக அதிகார சபையின் புதிய தலைவர் டிலீப விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

700 'மில்லியன் ரூபாவை மேலதிகமாகச் செலவு செய்து உருவாக்கப்படவிருந்த கணினி வலையமைப்பு ஒன்றையே தற்போதைய நிர்வாகம் இனங்கண்டுள்ளது. 1300 மில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட விருந்த இந்தத் திட்டத்தில் 700 மில்லியன் ரூபா தேவையற்ற விதத்தில்செலவிடப்பட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

இதேபோன்ற திட்டம் 600 மில்லியன் ரூபா செலவில் ஏனைய இடங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக காட்டப்பட்டுள்ளது. (32)

## ஓட்டுசுட்டான் ம.வியில் மர நடுகைத் திட்டம்

(ஒட்டுசுட்டான்)

யு.என்.டி.பி. நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையக முல்லை மாவட்டத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய மரநடுகைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு பொருண்மிய மதியுரையக முல்லை.மாவட்ட இணைப்பாளர் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற மங்கல விளக்கினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி சுபாசினிகந்தையா, ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் ஆகியோர் ஏற்ற தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் கதிர் ஏற்றினார். மர நடுகைத் திட்டத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி சுபாசினி கந்தையா ஆரம்பித்து வைத்தார்.

மர நடுகைத்திட்டம் தொடர்பான கருத்துக்களை முல்லைமாவட்ட சுற்றாடல் உத்தியோகத்தர் கருணைவேல் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய உப அதிபர் செல்வி. நிமலாதேவி விசுவலிங்கம், முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் ஆற்றினர். இதில பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

## இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அரசின் பிரதான பணிகளை விளக்குக!

### -விவசாயத்துறை அமைச்சர் கோரிக்கை

அரசாங்கத்தின் பிரதான பணிகள் தொடர்பாக இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அமைச்சரவைக்கு விளக்கமளிக்கும் திட்டம் ஒன்று தொடர்பில் தாம் சனாதிபதியை வலியுறுத்தப் போவதாக விவசாயத்துறை அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அமைச்சரவைக்கு விளக்கமளிக்கும் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்புத் தொடர்பாகக் கடும் விமர்சனங்களை வெளியிட்டிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சனாதிபதி கூறியதைப் போல இந்தத் திட்டத்தில் உரிய நிதியாள்கை நடைபெறவில்லை. மற்றும் மாகாணசபைக்குள் வரும் திட்டங்களை மாகாணசபைகளுடன் ஒப்பந்தம் இல்லாமல் மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை எனத் தெரிவித்துள்ளார்.

எனவே தமது திட்டம் தொடர்பில் கூறப்பட்ட உண்மையற்ற விடயங்களை அமைச்சரவைச் செயலர் நிவர்த்தி செய்வார் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## மண்சரிவு

(கொழும்பு)

அதிக மழை காரணமாக காலி ஹெத்தலகொடப் பகுதியில் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மண்சரிவின் காரணமாக 4 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

இப் பகுதியிலுள்ள வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள வீடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளதாகவும் மேலும் 15 வீடுகள் மண் சரிவில் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.


## 4ஆம் ஆண்டு நினைவில்

தாயின் மடியில் 12 ☐ 03 ☐ 1975



தாயக மண்ணில் 18 ☐ 10 ☐ 2000

### மேஜர் ஆதவன்

(முத்துச்சாமி-சிவகணேசன் (முரளி)

காங்கேசன்துறை-யாழ்ப்பாணம்.

காவியமான புலிவீரா ஆதவா!
நீ எமை விட்டுப் பிரிந்து
நான்குவருடங்களாகின்றன.
உன்னை விட்டுப் பிரிந்து வாழ முடியாது
தவித்த எம்மை உன் அம்மாவும்
உன்னைப் பிரிந்து வாழ முடியாமல்
உன்னிடம் வந்துவிட்டார்
உங்கள் இருவரையும் பிரிந்து-நான்
இங்கு ஆழ்ந்த துயருடன் நாட்களை
எண்ணிக்கொண்டிருக்கின்றேன்
என்றும் உங்களின் நினைவில்.

தற்போதைய முகவரி:-
ஆதவன் இல்லம்,
முத்துமாரி அம்மன் கோவில் வீதி,
2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்
சி.முத்துச்சாமி.

(5186)



முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி
திரு. மு.கந்தசாமி அவர்களின்

## 4ஆம் ஆண்டு நினைவில்



உண்மையின் உருவமாகி
உணர்விலே தெய்வமாகி
கடமையிலே கண்ணியமாய்
வாழ்ந்த எம் அருமை
ஐயாவே உங்களை இனி
எப்போது காண்போம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

கிளிநொச்சி சுகாதார
வைத்திய அதிகாரியும்,
உத்தியோகத்தர்களும்.

(சி-10272)

# இல.இல் மசகு எண்ணெய்த் தொழிற்சாலை தொடங்க இந்.எண்ணெய்க் கழகம் திட்டம்

இலங்கையில் இந்திய எண்ணெய்க கழகம் சார்பில் மசகு எண்ணெய் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் உள்ளது என்று இந்திய எண்ணெய்க்கழக நிர்வாக இயக்குனர் எம்.நாகேஷ்வரன் கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள இந்திய எண்ணெய்க்கழக நிர்வாக இயக்குனர் எம்.நாகேஷ்வரன் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது; இலங்கையிலுள்ள இந்திய எண்ணெய்க்கழக நிறுவனம் தனது சர்வோ லூப்ரிகண்ட்ஸ் மூலம் சந்தையில் தனி முத்திரையை பதிக்கத் தொடங்கி உள்ளது. 'சர்வோ' ஓயில் இந்தியாவில் அதிகமாக விற்பனை செய்யப்படும் பொருளாகும்.

இலங்கையில் உள்ள அனைத்து இந்திய எண்ணெய்க் கழக விற்பனை நிலையங்களிலும் சர்வோ ஓயில் கிடைக்கிறது. திரு கோண மலையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க சீன விரிகுடா டேங்க் பண்ணையை இலங்கை இந்திய எண்ணெய்க் கழகம் 35 வருடத்திற்கு குத்தகைக்கு எடுத்துள்ளது.

அங்கு 99 டாங்கிகள் உள்ளன. ஒவ்வொரு டாங்கும் 12 ஆயிரத்து 250 கிலோ லீட்டர் கொள்திறன் கொண்டவையாகும். இதனால் பெற்றோலியப் பொருள் விற்பனை தடையின்றி இலங்கையில் கிடைக்கிறது. திருகோண மலையில் எரிபொருள் சேகரிப்பு நிலையம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

ரூ.57 கோடி இலாபம் இந்திய எண்ணெய்க் கழகம் இலங்கையில் பெற்றோல், டீசல் உள்ளிட்ட பெற்றோலிய விற்பனையில் சிறந்து விளங்குகிறது. கடந்த 2003-2004 ஆம் ஆண்டு ரூ 1,453 கோடிக்கு விற்பனை நடந்துள்ளது. இதில் இலாபம் ரூ 57 கோடி 2004-2005 ஆம் ஆண்டுக்கு ரூ 3,300 கோடிக்கு விற்பனை நடைபெறும் என்றும் அதன் மூலம் ரூ 240 கோடி இலாபம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## - மகாராஷ்டிரா சட்டசபைத் தேர்தல் -
# இந்துத்துவக் கொள்கையைக் கைவிட்டதால் சிவசேனை – பா.ஜ.கூட்டணி தோற்றதாம்

இந்துத்துவக் கொள்கையினை கைவிட்டதால்தான் மகாராஷ்டிர சட்ட சபைத் தேர்தலில் சிவசேனை- பாரதிய ஜனதா கூட்டணி தோல்வியடைந்துள்ளது என்று விஸ்வஹிந்து பரிசட்டின் சர்வதேச பொதுச் செயலர் ப்பிரவீன் தொகாடியா கூறியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த காலங்களில் இந்துத்துவவுடன் வளர்ச்சிப் பணிகளையும் முன்வைத்து பிரச்சாரம் செய்து வந்த பாரதிய ஜனதா சிவசேனை கூட்டணி இம்முறை வளர்ச்சிப் பணிகளுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து பிரச்சாரம் செய்தமையினால் தோல்வியடைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.



திருச்சியில் ஒரே குடும்பத்தில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்ட 5 பேரைப் படத்தில் காணலாம்.


# சிவகுரு வாணிபத்தினரின் நவீன உமாசாகி காட்சியறை
# இன்று நண்பகல் 12.30 மணியளவில் கோலாகலமான திறப்புவிழா

தென்கிழக்காசிய நாடுகளில் அதியுயர்ந்த உலோக பலம், சக்தி வாய்ந்த உமாசாகி சீனாவின் உன்னத தயாரிப்பாகும். இதனை நேரடியாக சென்.அன்ரனீஸ் நிறுவனத்தார் சிவகுரு உந்துருளி வாணிபத்தினருக்கு பிரத்தியேகமாக இறக்குமதி செய்துள்ளார்கள். இதற்கு ஒரு வருட உத்தரவாதமும் அதி திறமையான உதிரிப்பாகங்களும் சிவகுரு வாணிபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இன்று கொள்வனவு செய்யும் உந்துருளிகளுக்கு கொழும்பு விலையில் விசேட கழிவு

இலகு தவணைக்கட்டண முறையில் உமாசாகி உந்துருளி கொள்வனவு செய்யும் பொருட்டு St.Anthony's Consolidated Ltd நிறுவனத்தால் வங்கிக்கடன் வசதிகள் செய்து தரப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்வடைகின்றோம்.

உங்களுக்கான தெரிவுகளுக்கு எமது குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு வாருங்கள்

உமாசாகி உந்துருளிகளுக்கான வடபகுதி முகவராண்மை பெற்றவர்கள்

## சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

UMAZAKI

இல. 496,496/1, நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.

Free Service WARRANTY 10,000km or 1year











(சி-10492)

# சென்னை டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற இந்திய அணிக்கு 229 ஓட்ட இலக்கு



இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் சென்னையில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற இந்திய அணிக்கு 229 ஓட்ட இலக்கை அவுஸ்தி



ரேலிய அணி நிர்ணயித்துள்ளது.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் 150 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி மிகவும் நிதானமாக ஆடி 369 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.



துடுப்பாட்டத்தில் இரவு காவலாளியாக (Night Watchman) களமிறங்கிய கிளெப்சியின் நின்று நிலைத்தாட்ட துணையுடன் டேமியன மாட்டீன் சதமடித்து அவுஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தார்.

இருவரும் இணைந்து 140 பிரிக்கப்படாத ஓட்டங்களைப்



பகிர்ந்து கொண்டனர்.

மாட்டீன் 104 ஓட்டங்களை எடுத்து ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் மிகச் சிறப்பாக பந்து வீசிய அனில் கும்ளே நேற்றும் மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றி அவுஸ்திரேலியாவின் அதிக ஓட்டம் பெறும் வாய்ப்பை தடுத்து நிறுத்தினார். மொத்தமாக கும்ளே 133 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஹர்பஜன்சிங் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி ஆடும் இந்திய அணி நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின் போது விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களைபெற்றிருந்தது.

இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

# சாதனை படைத்த வோர்னுக்கு சச்சின் டெண்டுல்கர் பாராட்டு



டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தி உலக சாதனை படைத்த அவுஸ்திரேலியவீரர் வோர்னுக்கு டெண்டுல்கர் பாராட்டுத் தெரிவித்தார்.

சென்னையில் நடந்து வரும் இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியின் 2 ஆவது நாளில் அவுஸ்திரேலிய சுழல்பந்து வீச்சாளர் வோர்ன் பதானின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் முரளிதரனின் சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை (533 விக்கெட்டுகள்) படைத்தார்.

வோர்னின் சாதனையை டெண்டுல்கர் பாராட்டி. மும்பையில் கூறியதாவது;

வோர்னின் ஆட்டத்திறன் மிகவும் சிறப்பானதாகும். இது போன்ற திறன் எல்லா நாட்களிலும் வெளிப்படாது. வோர்னின் 12 ஆண்டு கால உழைப்புக்குக் கிடைத்த பலன் இதுவாகும். இதுமறக்க முடியாத சாதனையாகும். எல்லோராலும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

சிறந்த பந்துவீச்சாளர்களான முரளிதரன் மற்றும் வோர்ன் இடையே யார்? 1000 விக்கெட்டை முதலில் தாண்டுவது என்ற போட்டி நடப்பதாக நான் நினைக்கிறேன். இந்த ஆரோக்கியமான போட்டி ஆட்டத்துக்கு மிகவும் நல்ல ஒன்றாகும். இருவரும் ஒருவருக்கொருவர் திறமையை மதிக்கக் கூடியவர்கள் என்றார்.



"பாக்டெல" வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த மகிழ்ச்சியில் சிறிலங்கா கிரிக்கெட் அணி




## அவுஸ். பயிற்சியாளர்களைப் பெரிதும் விரும்பும் உலகக் கிரிக்கெட் அணிகள்

உலகில் எந்தக் கிரிக்கெட் அணிகளும் அவுஸ்திரேலிய பயிற்றுவிப்பாளர்களையே அதிகமாக விரும்புகின்றன. அந்த வகையிலேயே வட்மோர் சிறிலங்காவினால் பதவி நீக்கப்பட்ட பின் ஜோன் டைசன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

இவர் 18 மாத காலத்துக்கு சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு பயிற்றுவிப்பாளராக வந்தார், முதலில் அணி பல போட்டிகளில் பிரகாசிக்கத் தவறினாலும் அண்மைக்காலமாக சிறிலங்கா போட்டித் தொடர்களை வென்று வருகின்றது.

அந்த வகையில் 2007ஆம் ஆண்டுக்கு முதல் ஜெயசூரிய போன்ற மூத்த வீரர்கள் ஓய்வில் செல்லும் போது மகேல, சங்கக்கார, மஹ்ரூப், மாலிங்க போன்றோர் சகலதுறை வீரர்களாக பரிணமிக்க முடியும் என டைசன் தற்போது கருத்துத்தெரிவித்துள்ளார்.

# ஷேன்வோர்னின் விக்கெட் சாதனையை முரளிதரன் விரைவிலேயே மிஞ்சி விடுவார்

—ரிச்சி பேனாட்



ஐந்நூறுக்கும் மேற்பட்ட டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனையில் ஷேன் வோர்னே இப்போது முதலிடத்தில் இருக்கலாம். இலங்கை அணியின் முத்தையா முரளிதரன் அவரை விரைவிலேயே மிஞ்சி விடுவார் என்று எச்சரிக்கிறார் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரிச்சி பேனாட், ஷேன்வோர்னே லெக்-ஸ்பின்னர், முத்தையா முரளிதரன் ஓப்ஸ் பின்னர் இருவருமே சுழல் பந்து வீச்சாளர்கள்.

அவுஸ்திரேலியாவின் வேகப் பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத் 446 டெஸ்ட் விக்கெட்டுக்களையும் இந்திய சுழல் பந்து வீச்சாளர் அனில் கும்ளே 409 டெஸ்ட் விக்கெட்டுக்களையும் இதுவரை வீழ்த்தியுள்ளனர். இருவரும் தொடர்ந்து விளையாடி வந்தாலும் 500 விக் கெட்டுக்களை எட்டுவதே அபூர்வம் என்று கருதுகிறார் பேனாட்

இர்பான் பதானை ஆட்டமிழக்க வைத்த பந்து அற்புதமாக வீசப்பட்டிருந்தது. முக்கியமான சாதனைகளின் போது நல்ல பந்தில் விக்கெட் வீழ்ந்தால் அந்த மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது என்று "மெல் போர்ன்ஹெரால்ட்சன்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

இச் சாதனைக்குப் பிறகு வோர்னே மிகுந்த நிம்மதியை எட்டியிருப்பார் மூன்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் அலன் போடர் கூறினார்.

# வீரர்களின் மோசமான ஆட்டம்; தென்னாபிரிக்க பயிற்சியாளர் இராஜினாமா

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிப் பயிற்சியாளர் எரிக் சைமன்ஸ் இராஜினாமா செய்துள்ளார். சமீப காலங்களில் தென்னாபிரிக்கா மோசமாக விளையாடி வருவதையடுத்து சைமன்ஸ் இந்த முடிவை மேற்கொண்டுள்ளார். இந்திய அணி சுற்றுப் பயணத்துக்கு ஒரு மாதத்திற்கு முன்பாக இராஜினாமா செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் வாரிய செய்தித் தொடர்பாளர் இதை உறுதி செய்தார். அடுத்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றார்.

இலங்கையில் தென்னாபிரிக்காவுக்குக் கிடைத்ததோல்வி குறித்தும் ஐ.சி.சி சம்பியன் கோப்பையில் மோசமாக விளையாடியது குறித்தும் கடும் கண்டனங்கள் எழுந்தன. இதையடுத்து இவர் இம்முடிவை மேற்கொண்டுள்ளார்.

ஸ்ரிவோ, ஜெப்மார்ஷ், டாம் மூடி ஆகியோரில் யாராவது புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

எனினும் இந்தியத் தொடருக்கு மட்டும் முன்னாள் டெஸ்ட் ஆட்டக்காரர் ரேஜென்னிங்ஸ் நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.மேலும் முன்னாள் மேலாளர் கூலம் ராஜாமீண்டும் அழைக்கப்படலாம் என வும் தெரிகிறது.

சைமன்சின் இராஜினாமாவையடுத்து தேர்வுக் குழு அமைப்பாளர் . ஓமர் ஹென்றியின் பதவிக்கும் ஆபத்து எழுந்துள்ளது.

# ரஷ்ய டென்னிஸ் போட்டி: அரையிறுதிக்கு மகேஷ் பூபதி ஜோடி

ரஷ்ய டென்னிஸ் போட்டியின் அரை இறுதிக்கு மகேஷ்பூபதி ஜோடி முன்னேறி உள்ளனர். கிரம்ளின் கோப்பைக்கான டென்னிஸ் பந்தயம் ரஷ்ய நாட்டில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான அரையிறுதிக்கு இந்தியாவின் மகேஷ்பூபதி-ஜோர்க்மென்(சுவீடன்) ஜோடி தகுதி பெற்றிருக்கிறது. மகேஷ் ஜோர்க்மென் ஜோடி காலிறுதியில் 7-5,6-4 என்ற நேர் செட்டில் அலெக்ரோ (சுவிற்சர்லாந்து)-மைக்கேல் கோல்மென் (ஜேர்மன்)ஜோடியைத் தோற்கடித்தது.

# இயன் பிரட்ஷோ பெயரில் பாபடோஸ் மக்களால் வீதி திறப்பு



மேற்கிந்தியத்தீவுகள் பல வருடஙகளாக கிரிக்கெட் அணிக்கு எந்த ஒரு வெற்றியும் கிடைக்காத நிலையில் கடந்த மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற ஐ.சி.சி மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற பெரிதும் உதவியாக இருந்த இருவரில் இயன் பிரட்ஷோவும் ஒருவர் இறுதிப் போட்டியில் தோலவியைத் தழுவும் நிலையிலிருந்த அணியை வெற்றி நோக்கி இட்டுச் சென்றதுடன் கடைசி வெற்றி ஓட்டத்தை எல்லைக் கோட்டுக்கு பந்தை செலுத்தி பெற்ற பிரட்ஷோவுக்காக பாபடோஸ் மக்கள் வீதியொனறுக்கு பிரட்ஷோ வீதி எனப் பெயரிட்டு அவருக்கு கௌரவமளித்துள்ளனர்.

# பாடசாலைகளுக்கிடையிலான ஈட்டி எறிதல் அக்கராயன் ம.வி மாணவிக்கு 3 ஆம் இடம்



அக்கராயன் ம.வி மாணவி எஸ்.தாரணியுடன் பயிற்சியாளர் ச.விஜயநீதனை படத்தில் காணலாம்.

கிளிநொச்சி அக்கராயன் மாகாவித்தியாலய மாணவி எஸ்.தாரணி மகாண மட்டத்தில் இடம்பெற்ற 17 வயதின் கீழ் பிரிவுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் வெற்றியீட்டி தேசிய பாடசாலை மட்ட மெய்வல்லுனர் போட்டியில் ஈட்டி எறிதலில் கலந்து மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

இதன் மூலம் மேற்படி மாணவி விளையாட்டுப் போட்டி நிறச் சான்றிதழையும் (colours Award) பெற்றுக் கொண்டுள்ளார். (சோ)



## சிந்தனைக்கு

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஒரு தேசிய மக்கள் படையாக நாங்கள், எங்கள் போரை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# சனாதிபதியின் ஒரேகுறி !

அரசியல் யாப்பினைத் திருத்தி அமைப்பதற்காக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவுள்ளதாகவும், இவ்வாக்கெடுப்பு இவ்வாண்டின் இறுதியிலோ அன்றி அடுத்த ஆண்டின் தொடக்கத்திலோ இடம் பெறலாம் எனவும் அரச தரப்பில் இருந்து கசியும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி சந்திரிகாவின் இம்முயற்சியானது தற்போதைய அரசியல் யாப்பிற்கு இசைவானதா? இல்லையா? என்பது ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா எத்தகையதொரு வழிமுறையிலாவது தனது அரசியல் இருப்பை நிலை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராகவுள்ளார் என்பதையே இது வெளிப்படுத்துவதாய் உள்ளது.

சனாதிபதி சந்திரிகா தனது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைந்து விட்டதும் பதவியை விட்டு வெளியேறி விடப்போவதில்லை என்பது ஏற்கனவே வெளிப்பட்டு வரும் ஒன்றாகவே உள்ளது. ஏதோ ஒரு வழியில் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளுதல் அன்றி மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுதல் என்பதில் சந்திரிகா குமாரதுங்க என்றும் அக்கறை கொண்டவராகவே உள்ளார்.

இதற்கு இரண்டு வழிமுறைகள் அவரால் பரிசீலிக்கப்பட்டதாக இருப்பினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து பாராளுமன்ற ஆட்சி முறைக்கு மாறுதலே சாத்தியப் பாடானதாக இருக்கும் என்பதே சனாதிபதியின் தீர்மானமாகவுள்ளது. இவ்அரசியல் யாப்பு திருத்தத்தின் மூலம் பிரதமருக்கு நிறைவேற்று அதிகாரங்களை வழங்குதல் என்பதும் சந்திரிகாவின் நோக்கிலுள்ளதாகும்.

சனாதிபதி சந்திரிகாவின் இத்திட்டத்திற்கு ஜே.வி.பி யின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது கடினமானதாக இருக்க மாட்டாது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பிற்கு ஜே.வி.பி எதிராக இருக்க மாட்டாது என்றே நம்பப்படுகின்றது. ஆயினும் சிறுபான்மை இனக்கட்சிகள், குறிப்பாக அரசாங்கத்தில் அங்கம் பெறும் இ.தொ.க முஸ்லிம் பிரதிநிதிகளின் ஆதரவு இதற்குக் கிட்டுமா? என்பது தீர்மானிக்கப்பட முடியாதவையாகவே இருக்கும்.

ஏனெனில் சனாதிபதி ஆட்சிமுறையானது சிறுபான்மை யினருக்குச் சில பாதுகாப்பை வழங்கக் கூடியது எனக் கூறப்பட்டாலும்- இது நடைமுறையில் எத்தனை தூரம் சாதகமானதாக உள்ளது என்பது வேறு விடயம்-அரசியல் யாப்பு மாற்றமானது தனியாக சனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பாக மட்டுமல்லாது, விகிதாசாரத் தேர்தல் முறை ஒழிப்புடனும் சம்பந்தப்படும் பட்சத்தில் சிறுபான்மை இனக்கட்சிகள் தமது ஆதரவை இவ் அரசியல் யாப்பு மாற்றத்திற்கு வழங்குவதென்பது தற்கொலைக்கு ஒப்பானதாக இருக்கும்.

ஏனெனில் விகிதாசார தேர்தல் முறை ஒழிப்பு என்பது இச்சிறுபான்மை இனக்கட்சிகளின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை வெகுவாகவே பாதிக்கத்தக்கதாகும். தற்பொழுது இவை பெறும் பாராளுமன்ற ஆசனங்களில் ஐம்பது சதவீதத்தைக் கூட அவற்றால் பெற முடியுமா? என்பது சந்தேகமே. இதேவேளை விகிதாசாரத் தேர்தல் முறை முற்றாக ஒழிக்கப்படாது விட்டாலும் பாதிப்பென்பது தவிர்க்க முடியாத தாகவே இருக்கும்.

விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவத்தை சிங்கள ஆட்சியாளர்களும், பௌத்த- சிங்கப் பேரினவாதிகளும் நீக்கவேண்டும் எனக் கோருவதும், முற்படுவதும் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினரின் செல்வாக்கை மட்டுப்படுத்துவதற்காகவே. அதாவது அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மையினர் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவே.

ஆகையினால் அரசியல் யாப்பு மாற்றம் என்பது சனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புக்கு மட்டுமானதாக இருக்கப்போகின்றதா? அன்றி அதனுடன் இணைந்ததாக விகிதாசாரத் தேர்தல் முறை ஒழிப்பு இருக்கப் போகின்றதா? என்பவையும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆகையினால் கருத்துக்கணிப்பானது சனாதிபதி ஆட்சிமுறை மாற்றத்திற்கு மட்டுமானதா? அன்றி தேர்தல் முறைமாற்றம் உட்பட்ட அனைத்தையும் உள்ளடக்கியதானதா? என்பதைப் பொறுத்தே எதிர்கால அரசியலில் அதன் முக்கியத் துவம் இருக்கும்.

# ஒரு வாரத்திற்கு மேல் பாடசாலைகளை முடக்கும் வகையில் போராட்டம்

## -ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முடிவு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஒரு வாரத்திற்கு மேல் பாடசாலை களின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலான பகிஷ் கரிப்புப் போராட்டம் ஒன்றை நடாத்த ஆசிரியர் தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

தமது சம்பள முரண்பாடு களைச் சீர்செய்தல், ஆசிரியர் இடமாற்றங்களைச் சீர்செய்தால் அவர்களுக்குக் கடன் திட்டங் களை வழங்குதல் மற்றும் பதவி யுயர்வுகள் ஆகிய கோரிக் கைகளை முன்வைத்தே இப் பகிஷ்கரிப்புப் போராட்டம் வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நடாத்தப்படவுள்ளது.

அறுபதாயிரம் உறுப்பினர் களைக்கொண்ட குறைந்தது பத்து தொழிற்சங்கங்கள். தமது கோரிக்களைக் கவனத்தில் எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோரி இப்போராட்டத்தில் குதிக்க வுள்ளன.

அத்துடன் மாணவர் உரிமை கள் தொடர்பில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் இப்போராட்டத்தில் தெளிவாக்கப்படும் என்றும், நாடளா விய ரீதியில் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பிலான தேசியக்கொள்கை ஒன்றிற்கான அறைகூவலாக இப்போராட்டம் அமையவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறு மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சரும், ஜே.வி.பி.உறுப்பினருமான லால்காந்த ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என அண்மையில் வாக்குறுதி யளித்த போதிலும், அது நடைமுறைப்படுத்தப்படாததை யடுத்தே இப்போராட்டம் நடாத்தப்படவுள்ளதாக "சண்டே லீடர்'' ஆங்கில வாரஇதழ் கூறுகின்றது.

# பெண்களைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு புரிந்த குழு கைது

கொழும்பின் புறநகர் தொம்பே பகுதியில் பெண்க ளைக் கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் புரிந்து வந்த குழு வினரைக் பொலிசார் கைது செய்துள்ளனர்.இந்தக் குழு வினர் பல வருடங்களாக இவ் வாறான நடவடிக்கைகளில் ஈடு பட்டு பல பெண்களைப் பாலியல் பலாத்காரம் புரிந்திருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு வந்த ஒரு வரின் வயிற்றுக்குள் இருந்து 75 ஹெரோய்ன் அடங்கிய குளி சைகள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க வந்தடைந்த பாகிஸ்தானியர் ஒரு வரிடம் இருந்தே இந்தக் குளி சைகள் மீட்க்பட்டுள்ளன. இவற்றின் சந்தைப்பெறுமதி 15 இலட்சம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. இதேவேளை இந்த மாதத்தில் மாத்திரம் விழுங்கிய நிலையில் ஹெரோய்ன் கடத்தி வரப்பட்ட சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. (32)

## கணக்கு வைப்பில் குழறுபடி

# பொலிஸ்,படைத்துறைக்கு மேலதிக நிதி ஒதுக்கமுடியாத நிலை

பொலிஸ் மற்றும் இராணுவம் ஆகியவற்றின் செலவுகளுக்காக மேலதிகமாக நிதி ஒதுக்கீட்டைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. எதிர்வரும் வரவு, செலவுத் திட்டத்தில் படைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் வகையில் அண்மையில் சனா திபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுளளது . பொலிஸ் மற்றும் இராணுவத் துறையில் உரிய கணக்குகள் மேற்கொள்ளப்படாமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# அரசின் மன்னிப்புக் காலப்பகுதியில் எவ்வித ஆயுதமும் ஒப்படைக்கப்படவில்லை

சட்ட விரோத ஆயுதங்களை ஒப்படைக்கும் வகையில் பாது காப்பு அமைச்சினால் அறிவிக்கப் பட்டிருந்த பொதுமன்னிப்புக் காலத்தில் இரண்டு வாரகாலப் பகுதியில் இதுவரை எவ்வித ஆயுதங்களும் ஒப்படைக்கப் படவில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதிவரை இந்தப் பொது மன்னிப்புக் காலம் பிர கடனப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் தற்சமயம் சுமார் 50 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப் பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# வாகன இறக்குமதி வரியை அதிகரித்தமைக்குக் கண்டனம்

தனியார் மோட்டார்க் கார்கள், வான்கள் மீதான இறக்குமதி தொடர்பாக சுங்க வரி அதிகரிப்பை மீளாய்வு செய்யுமாறு உள்ளூர் வாகன இறக்குமதியாளர்கள் கேட்டுள்ளார்கள்.இந்தப் பிரச் சினைக்கு அரசாங்கம் கவனம் செலுத்தாவிட்டால் வாகன இறக்குமதியைத் தாம் நிறுத்த நேரிடும் என்று இறக்குமதியா ளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாகன இறக்குமதி சங்கத் தின் முன்னாள் தலைவர் பேட்டி வித்தானகே தெரிவித்த இந்தத் தகவலில் சுங்கத் தீர்வை சொகுசு வாகனங்களுக்கு115 சதவீதமும் ஏனைய வாகனங்களுக்கு 30 சதவீதமும் அதிகரிக்கப்பட்டுள் ளதாகவும் கூறினார். இந்தத் தீர்வை அதிகரிப்பு கடந்த ஞாயிறு இரவு தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளதால் இப் பிரச்சினை குறித்து அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த தமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை யென்றும் வாகன இறக்கு மதியாளர்கள் தெரிவித்துள் ளார்கள்.

நிதியமைச்சு இது பற்றித் தெரிவிக்கையில் வெளிநாட்டு நாணயமாற்று விரயத்தைக் குறைப்பதற்கும் தற்போதைய பெற்றோலியப் பொருட்களுக் கான நெருக்கடி நிலையைச் சமாளிப் பதற்குமென வாகனங் களின் இறக்குமதி மீதான சுங்கவரி அதிகரிக்கப்பட்டிருக் கின்றது என்று குறிப்பிட்டுள்ளது.

# தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற முன்னாள் அரச ஊழியருக்கு ஓய்வூதியம்

## சிறில. அரசாங்கம் திட்டம்

பொதுத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் அரச ஊழியர்களுக்கு ஓய்வுதியம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அரச திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்களில் தொழில் புரிந்த ஊழியர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்து தேர்தலில் போட்டியிட்டு தோல்விய டைந்திருப்பின் அவர்களில் தொழில் இல்லாமல் இருப்பவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 10 வருடங்களுக்கு அதிகமாக அரச திணைக் களங்களில் தொழில் புரிந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கே அரசாங்கம் தீர்மானித்துளளது.

மாவீரர் அபயன் நினைவாக

# மாலை நேர வகுப்பு மண்டபம் பன்னங்கண்டியில் திறப்பு

தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியினரால் கிளிநொச்சி பன்னங் கண்டிப்பகுதியில் மாலை நேர வகுப்பிற்கான மண்டப மொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து வரும் பன்னங்கண்டிப்பகுதி மக்களின் நலன் கருதியும், அப்பகுதி மாணவர்களின் கல்வியினை மேலோங்கச் செய்யும் நோக்குடனும் பன்னங்கண்டி முன் பள்ளிக்குரிய வளாகத்தில் மாவீரர் அபயனின் நினைவாக தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியினரால் 3 இலட்சம் ரூபா செலவில் மாலைநேர வகுப்புக்களை நடத்துவதற்காவும் பொது நோக்கு மண்டபமாக பயன்படுத்தும் நோக்குடனும் இம் மண்டம் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் நடைபெற்ற இம் மண்டபத் திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை கரைச்சி வடக்கு அபிவிருத்திச் சங்கத்தலைவர் நடராசா அவர்கள் ஏற்றி வைக்க, தமிழீழ தேசிய கொடியினை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் ஏற்றி வைத்தார், மண்டபத்தின் பெயர்ப் பலகையினைத் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் திறந்து வைக்க, மண்டபத்தினை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார் அடுத்து மாவீரர் அபயனின் திருவுருப்படத்திற்கு அவரது பெற்றோர்கள் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.தொடர்ந்து சிறப்புரைகள்இடம்பெற்றன.






தொடர்ந்து பன்னங்கண்டி இ.த.க.பாடசாலையில் 5ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவி நவரத்தினம் ஜனார்த்தனிக்கு தமிழீழ மாணவர் அமைப்பினரால் அன்பளிப்புச் செய்த மிதிவண்டியினை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கிப் பாராட்டுத் தெரிவித்தார். இதனையடுத்து இந்நாளினை நினைவு கூரும் முகமாக மரநடுகை வைபவமும் இடம் பெற்றது. (ச.தீ)

# 'அலைபாடும் பரணி' இறுவெட்டு நேற்று நெல்லியடியில் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கடற்புலிகளின் சாதனைகளையும் அவர்களின் வீரச் செயல்களையும் வெளிப்படுத்தி நிற்கும் "அலைபாடும் பரணி" எனும் இறுவெட்டு அறிமுக விழா வடமராட்சி நெல்லியடியில் உள்ள நெல்லை முருகன் மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் அருண் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பொதுச்சுடரை வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார். நிகழ்வில் ஈகச்சுடரினை மாவீரர் ரோமின் தந்தையார் கணபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து இறுவெட்டின் பிரதியை யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் வெளியிட அதனை மாவீரர் ரோமின் தந்தை கணபதிப்பிள்ளை பெற்றுக்கொண்டார். சிறப்புரைகளை யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் மற்றும் மாவட்ட மகளிர்அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் வழங்கினர். இதில் போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.(33,27)

# மாணவி உட்பட 05 பேரை சுட்டுக் கொன்ற கான்ஸ்டபிள்

## -துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை

(கொழும்பு)

சிறிலங்கா றிசேவ் பொலிஸ் ஒருவர் பன்னிரண்டு வயதுடைய மாணவி ஒருவர் உட்பட ஐந்து பேரைச் சுட்டுக்கொலை செய்துவிட்டு துப்பாக்கியால் தன்னையும் சுட்டு தற்கொலை செய்துள்ளார்.

நீர்கொழும்பு தளுவத்தைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாகவே இந்தக் கொலைகள் நடைபெற்றிருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இதன் போது கொல்லப்பட்டவர்களில் நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், உயிரிழந்தவர்களில் மூவர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்படி நால்வரையும் கொலை செய்த றிசேவ் பொலிஸ் நீர்கொழும்பு கிராம மாவத்தையில் வசிக்கும் பெண் ஒருவரையும் கொலை செய்துள்ளார்.

இந்தக்கொலைகளுக்கு என்ன காரணம் என அறிய முடியாமல் உள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

### கனேடிய...

விற்கான தனது விஜயத்தின் போது இரு தரப்பினரையும் சந்திப்பதற்கு தான் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்துள்ள மரியா மின்னா, கடந்த தடவை கனடாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பில் கிரகாம் சிறிலங்காவிற்குச் சென்ற போது விடுதலைப் புலிகள் தரப்பைச் சந்திக்காதது போல் இம்முறை தான் செய்யப்போவதில்லை எனவும் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளையும், அரச தரப்புப் பிரதிநிதிகளையும் சந்திக்காது விட்டால் இந்த விஜயத்தில் எந்தவித அர்த்தமும் இல்லை எனவும் கூறிய அவர், இருதரப்பினரையும் சந்திப்பதில் எந்தவிதத் தடையும் இருக்கும் என தான் நம்பவில்லை எனவும் கூறியுள்ளார். இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த மரியா மின்னா, சிறிலங்காவின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு கனடா எப்போதும் உரிய உதவிகளை வழங்கும் எனவும் உறுதியளித்துள்ளார்.

# ஈருருளியில் சென்ற சிறுவர்கள் மீது கொக்குவிலில் வாகனம் மோதியது

## சிறுவர் இருவர் படுகாயம்

நேற்று 2.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த நில்மா கம்பனியின் விநியோக வான் ஒன்று கொக்குவில் நோக்கிஒரே துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்த இரண்டு சிறார்களோடு பக்கம் மாறிச் சென்று மோதியது. இதன் போது துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்த இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது 12 வயதுடைய இ.தனுஷன் என்பவர் கொக்குவில் சந்தியில் அவரது தந்தையார் கடையில் உள்ளதால் அவருக்குச் சாப்பாடு கொண்டு வந்து கொண்டிருந்த போது கொக்குவில் நோக்கித் துவிச்சக்கரவண்டியில் வந்துகொண்டிருந்த பிரபாகரனுடன் துவிச்சக்கரவண்டியில் வந்துகொண்டிருந்தார். இதன் போது எதிரில் வந்துகொண்டிருந்த விநியோக வாகனம் திடீர் எனப் பக்கம் மாறி வந்து கொக்குவில் குளப்பிட்டிச் சந்தி இராணுவ முகாமிற்கு அருகாமையில் வந்து கொண்டிருந்த சிறார்களோடு மோதியது. அவ் வாகனத்தில் வந்த சாரதி உட்பட மூவரும் அருகில் உள்ள இராணுவ முகாமுக்குள் தப்பியோடி விட்டனர். பின்னர் 5 மணியளவிலேயே பொலிசார் அவ்விடத்துக்கு வந்த சேர்ந்தனர். காயமடைந்த இ.துதனுஷன் (வயது 12) என்பவரின் நிலை கவலைக்கிடமான நிலையில் உள்ளது. (36)

### மாலுசந்திப்...

வேகமாக எதிரெதிரே வந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டு விபத்திற்குள்ளானவேளை வீதியோரமாகப் பயணித்த இம் மாணவிகளை மோதியாகக் கூறப்படுகின்றது. இம் மாணவிகள் இருவரும் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கல்வி கற்றுவிட்டு சிறுவர் இல்லத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது..

படுகாயமடைந்த மாணவிகளான இ.தயாளினி (வயது 16) மற்றும் சூ.பிறேமினி ஆகிய இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (27)

### இ.த.அ....

நிலைப்பாட்டை வைத்திருக்கின்றது. அது மக்களுடைய ஆணையையும் பெற்றுள்ளது. ஆகவே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற வரைபை ஆலோசனையாகவும் ஏற்கனவே வைத்திருக்கின்றோம். இது சர்வதேச சட்டவல்லுநர்கள், சட்ட நிபுணர்கள் பலபேர் இணைந்து தயாரித்து, எமது தலைமைப் பீடத்தினுடைய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் ஆணைக்கும் வைக்கப்பட்டு தமிழ் மக்களுடைய ஆணையைப்பெற்ற ஒரு வரைவாகவும் இருக்கிறது. இந்த அடிப்படையில் தான் பேசுவோம் என்பது எமது தேசியத் தலைவர் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது தெளிவாக முன்வைத்த நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் மிக உறுதியாகவே இருக்கின்றார்கள்.

ஆகவே அரசாங்கத்திடம் இருந்துவரும் இந்தச் செய்திகள் எமக்கு அதிர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. இதை நிச்சயமாக விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்வார்களென நான் நினைக்கவில்லை. என்றார்.

இதேவேளை கரீம் பீரிஸ் அவர்கள் சில தினங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்ததாகவும் இதனையடுத்து பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் தொடங்கக் கூடும் என்ற ஊகங்கள் ஏற்பட்டுள்ளன. இது உண்மையா? என அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் பேட்டபோது அவர் தெரிவிக்கையில்;

இது மிகவும் தவறான செய்தி. விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தில் முக்கியமான எவரையும் சந்தித்ததாக எமக்குத் தகவல்கள் கிடைக்கவில்லை.

பேச்சுவார்த்தைகளுக்கான எந்த ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளுக்கு முழு அளவில் நோர்வே அனுசரணையாளர்களூடாக அரசாங்கம் எந்த முன்முயற்சிகளையும் எடுக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மிகவும் தெளிவாகவும் , உறுதியாகவும் இருக்கிறார்கள்.

தங்களால் தமிழீழ மக்களின் சார்பாக முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்ல புலிகள் தயாராக இருக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் அறிவித்துவரும் சூழ்நிலையில் நேரத்திற்கு நேரம் சூழ்நிலைக்கு ஏற்ப அரசாங்கமும், சனாதிபதியும் அவருடைய அமைச்சர்களும் கருத்துக்களைச் சொல்லிவருகிறார்களே தவிர சிந்தனைக்கும், செயல்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாத நிலையில் தான் தொடர்கின்றது என்றார்.

பேச்சுவார்த்தைகள் எப்போது மீண்டும் தொடங்கும் எனக்கேட்ட போது, நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். மிகவும் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார்கள். அரசதரப்பில் இருந்து பேச்சுவார்த்தைக்கான எந்த நிலைப்பாடுகளும் விடுதலைப்புலிகளுக்குக் கிடைக்கவில்லை.நாங்கள் எதிர்வரும் தினங்களில் நோர்வே வெளிவிவகார அமைச்சர், பிரதி வெளிவிவகார அமைச்சர் போன்ற முக்கியமானவர்களைச் சந்திக்கவுள்ளோம். அதன் பின்புதான் இதுபற்றிய நிலைப்பாடுகளை நாங்கள் கூறக் கூடியதாக இருக்கும் என்றும் கூறினார்.

### மட்டக்களப்பு...

(ராசீக் குழு) ஈ.பி.டி.பி, புளொட் போன்ற அமைப்புக்களின் உறுப்பினர்கள் பலரும் குடும்பங்களுடன் இப்பகுதியிலேயே வசித்து வருகின்றார்கள். விமானப் படைத் தளத்தை அண்மித்த பிரதேசம் என்பதால் இது சுற்றிவரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட இடமாகும். கொல்லப்பட்டவரின் சகோதரர் குமாரசூரியம் அழகேந்திரன் என்பவர் ராசிக் குழு எனப்படும் சிறிலங்கா இராணுவத்தின் தேசிய துணைப்படைச் சிப்பாயாக இருக்கின்றார். இச்சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தொடர்புடைய நபர்களும் அடையாளம் காணப்படவில்லையென மட்டக்களப்புப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

### பிரச்சினை...

மேலும் இலங்கைத் தமிழரின் உணர்வுகளை இந்தியா புரிந்து கொண்டு அதற்கேற்ற வாறு செயல்பட வேண்டும். இது இந்தியாவின் தார்மீகக் கடமை என்றும் சம்பந்தன் கூறினார்.

அண்டை நாட்டில் யுத்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு தமிழர்களின் உணர்வுகளுக்கு ஏற்பத் தீர்வு காணப்படுவதை உறுதி செய்வதாக இந்தியாவின் அணுகுமுறை அமைய வேண்டும்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு காணப்படும் தீர்வு, முஸ்லிம் மக்களுக்குத் திருப்தியளிப்பதாக அமைய வேண்டும்முஸ்லிம் மக்களுக்குத் திருப்தி அளிக்காத தீர்வு நிரந்தரத் தீர்வாக இருக்க மாட்டாது என்றும் அவர் கூறினார். விடுதலைப்புலிகளின் இராணுவப் பலம் காரணமாகவே இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த முன் வந்தது. நியாயமான தீர்வை ஏற்கத்தயாராக இருக்கின்றோம். அவ்வாறான ஒரு தீர்வை பெறக்கூடிய சூழல் நாட்டில் இல்லை. இதுதான் உண்மை. தமிழ்மக்கள் பொறுமையை இழக்கக்கூடாது. இராணுவ அரசியல் பலத்துடன் தான் விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்கு வந்துள்ளனர். எதிரி எமது பலத்தை உணர்வதற்காக அப்பலத்தை சோதிக்க அரசாங்கம் முன்வராது என்று நம்புகின்றேன். மிகவும் இக்கட்டான கால கட்டத்தில் இருக கின்றோம். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போய் விடுமோ என்பதற்கு நிச்சயம் நாம் காரணமாக இருந்து விடக்கூடாது என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (25)

### மாற்றுக்...

மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மாற்றுக் கருத்துடைய எந்தவொரு தமிழ்க்கட்சியும் இனிமேல் உருவாக முடியாது என்பதை தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் உணர்த்திவிட்டனர் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.